# யாழ். நகர வீதிகளில் குப்பை கொட்டுவோர் மீது வழக்கு!

## ஆணையாளர் அறிவிப்பு

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 273
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 26 றமழான் 12 வியாழக்கிழமை (12-11-70)

அருந்துங்கள்!
அண்ணா
கோப்பி
அண்ணா தொழிற்சாலை
இணுவில்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண நகர பொது வீதிகள், ஒழுங்கைகள், வடிகால் நகரில் குப்பை குளங்களைக் கொட்டுபவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநகரசபை ஆணையாளர் திரு. ஏ. ரி. சுந்தரம் பகிரங்க அறிவித்தல் ஒன்றை விடுத்துள்ளார்.

''அண்மையில் பெய்த மழையின் பின்னர் தறித்த மரங்களும், பழைய கிடுகுகளும் பெருந்தொகையாக வீதிகளில் குவிக்கப்படுவதைக் காணக்கூடியதாக விருக்கிறது. குப்பை கூளங்களை தெருக்களில் கொட்டும் வழமை தொடர்ந்து கொண்டிருப்பதால் இவற்றை நீக்குவதற்கு சட்ட வழியைத் தவிர்ந்த வேறு மாற்று வழி இருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் இதற்குப் பொறுப்பானவர்கள் மறு வழக்குத் தொடரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன்'' என்று ஆணையாளர் விடுத்துள்ள அறிவித்தலில் தெரிவித்துள்ளார்.

வளவுகளிலிருந்து பெருங்குவியலான குப்பை கூளங்களை, தறித்த மரத்தின் பாகங்கள், பழையகிடுகுகள் போன்றவற்றை அப்புறப்படுத்த விரும்பும் வீட்டுச் சொந்தக்காரர்கள் மாநகர சபை பொதுச் சுகாதாரத் திணைக்களத்தோடு தொடர்பு கொண்டு அவற்றை அப்புறப்படுத்த விசேட ஒழுங்குகளைச் செய்து கொள்ள வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. நகரத்தைச் சுத்தமாக வைத்திருக்க இது விடயத்தில் பொதுமக்களின் ஒத்துழைப்பை மாநகர சபை கோரியுள்ளது.

# நாட்டுக்காகத் தியாகங்கள் செய்வதற்குத் தயாராகுங்கள்

## பிரதமர் சிறிமாவின் உருக்கமான வேண்டுகோள்

கோட்டை, புதன்

**நாட்டின் நலன்கருதி மக்கள் தியாகங்கள் புரிவதற்கு முன்வர வேண்டும் என்று பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமா பண்டாரநாயக்கா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் கேட்டுக் கொண்டார்.**

என்னிடம் செல்வம் இருக்கிறது என்பதை யாவரும் அறிவர். ஆனால் நாட்டின் நலனுக்காகத் தியாகங்களைச் செய்வதற்கு நான் தயாராய் இருக்கிறேன் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

வரவுசெலவுத் திட்டம் இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதத்தில்கலந்து கொண்டு பிரதம மந்திரி உரை நிகழ்த்தினார்:

நாட்டின் நலனுக்காக பொதுமக்களை குறிப்பாக செல்வந்தர்களை தியாகம்புரிவதற்கு தயாராய் இருக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டபொழுது [illegible] கிறார்கள், இந்த முன்னேற்றப்பாதையை எவரும் தடுத்துவிட முடியாது என்றார்.

பாவனைப் பொருள்களின் விலைக்கட்டுப்பாடுபற்றி பிரதமர் குறிப்பிடுகையில் இந்தத் திட்டத்தைசமூகவிரோதிகள் முறியடிப்பதற்கு முயற்சி எடுக்கிறார்கள் என்றார். கட்டுப்பாட்டு விலைகளை மீறுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்என்று அவர் எச்சரிக்கை விடுத் [illegible] சத்துக்கு ஆரம்ப அடிப்படையாக இந்த வரவுசெலவுத்திட்டம் இருக்கின்றது என்றார்.

1948ம் ஆண்டு தொடக்கம் நாட்டின் செல்வம்முறையாகப் பயன்படுத்தப்பட்டிருந்தால் இன்றையஇக்கட்டான நிலைமை நாட்டுக்கு ஏற்பட்டிருக்காது என்று அவர் சொன்னார். காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டார [illegible]

கௌரவப் பிரஜைகள்

## 25 பேரின் பாஸ்போட்களை அரசு கைப்பற்றியது

கொழும்பு, புதன்

25 பேரின் பாஸ்போட்டுகளை அரசாங்கம் கைப்பற்றியுள்ளது. இவர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்தியவம்சாவழியினரான கௌரவப் பிரஜைகள்.

பழைய ரூபா நோட்டுக்கள் சம்பந்தமாகவும் வரி ஏய்ப்புக்கு எதிரான புதிய சட்டங்களின் காரணமாகவும் இவர்கள் இலங்கையில் இருக்க வேண்டியது அத்தியாவசியமென உள்நாட்டு [illegible] இறைவரி ஆணையாளர் தெரிவித்ததைத் தொடர்ந்து அரசாங்கம் இத்தநடவடிக்கையை [illegible]

பாதுகாப்பு [illegible] கார அமைச்சின் உதவி அமைச்சர் திரு. லக்ஷ்மன் [illegible] அடிப்படையில் இவர்களில் பலருக்கு கௌரவப் பிரஜாவுரிமை அளித்திருப்பதாகவும் ஆனால் இவர்களில் பலரும் சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதுமின்றி இந் நாட்டில்ஒரு காலும் இந்தியாவில் ஒரு காலும் வைத்துக்கொண்டிருப்பவர்களாகவும் இவர்கள் இருக்கின்றார்கள் என்றார் உதவி அமைச்சர்.

இதே சமயம் ஜனவரி மாதம் 31ம் திகதியளவில் நாட்டைவிட்டு வெளியேற வேண்டுமென்று கொழும்பு இந்திய நகை வியாபாரியான முகமத் பக்கீர் என்[illegible] [illegible] அரசாங்கம்விடுத்த [illegible] எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில்அவர் மனு தாக்கல் செய்திருக்கிறார். [illegible]

# ரூபா 10 லட்சம்சோலைவரி நிலுவை அறவிட நடவடிக்கை

யாழ்ப்பாணம், வியாழன்

சோலைவரிகளைச் செலுத்தாத யாழ்ப்பாண மாநகர சபை வரியிறுப்பாளர்களுக்குச் சொந்தமான அசையும் பொருட்களை மாநகரசபை நடுக்கட்டி வருகிறது. 1961-ம் ஆண்டிலிருந்து இதுவரை சுமார் 10 லட்சம் ரூபா செலுத்தப்படாமலிருப்பதால் இது விடயத்தில்மாநகரசபைதற்போது கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சோலைவரி கட்டாதவர்களை உடனடியாக மாநகர சபை வரிப்பகுதியினருடன் தொடர்பு கொண்டு பணத்தைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மகநகரசபையினர் அறிவிக்கின்றனர். பாக்கிப் பணத்தை தவணை முறையில் கட்டுவதற்கும் ஒழுங்குகள் செய்து தரவும் மாநகரசபை முன்வந்துள்ளதாகத் தெரிகிறது.

10 இலட்சம் ரூபா [illegible] யிறுப்பாளர்கள் மாநகர சபையுடன் ஒத்துழைத்து வரிப்பாக்கியைச் செலுத் தும்படியும் கேட்கப்பட்டுள்ளது.

## கான்ஸ்டபிள் நேர்முகப்பரீட்சை

### கா. பொ. வின் ஆட்சேபம்

யாழ்ப்பாணம், வியா.

பொலிஸ் கான்ஸ்டபிள்களுக்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 18-ந் திகதி அநுராதபுரம் பொலிஸ்நிலையத்தில் நடைபெறவிருக்கிறது. வடபகுதியிலிருந்து கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களுக்கும் அநுராதபுரத்திலேயே நேர்முகப் பரீட்சை நடைபெறும்.

இதுவரை வடபகுதி விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப்பரீட்சை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடத்தப்பட்டுவந்தபோதிலும் இம்முறை வழக்கத்திற்குமாறாக வேறுஒருமாகாணத்திலுள்ள பொலிஸ்நிலையத்தில் நடைபெறவிருப்பதை ஆட்சேபித்து ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பொலிஸ் மா அதிபருக்கு தந்தி அனுப்பியுள்ளார். வடபகுதி விண்ணப்பதாரிகளுக்கு யாழ். பொலிஸ் நிலையத்தில் நேர்முகப்பரீட்சையை நடத்தும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## துப்பாக்கி உபயோகத்தில் துஷ்பிரயோகம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வந்தர்களை தியாகம்புரி வதற்கு தயாராய் இருக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டபொழுது அதிகாரத்தைக் கைப்பற்றுவதுபற்றி நான் எண்ணவில்லை நாட்டு மக்களுக்கு சேவை செய்வதுபற்றித்தான் சிந்தித்தேன் என்றார் பிரதமர்,

அவர் மேலும் பேசுகையில் மக்களுக்கு நன்மை புரியும் திட்டங்களையே நாங்கள் உருவாக்குகிறோம்இவைகளை செயல்படுத்தும் திறமைமிக்க அதிகாரிகளே இப்பொழுது எங்களுக்குத் தேவைப்படுகிறார்கள்- சோஷலிச முன்னேற்றப் பாதையை மக்கள் விரும்புகிறார் திட்டத்தைசமூகவிரோதிகள் முறியடிப்பதற்கு முயற்சி எடுக்கிறார்கள் என்றார். கட்டுப்பாட்டு விலைகளை மீறுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கான அம்சம் வரவு-செலவுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பது இதுவே முதல் தடவை என்று குறிப்பிட்ட பிரதமமந்திரி, அரசாங்கத்தின் முன்னேற்றத் திட்டங்கள் வெற்றியளிப்பதற்கு அனைவரும் ஒத்துழைத்து ஆதரவளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

முன்னதாக அக்குரஸ்ஸ எம்.பி. டாக்டர் விக்கிரமசிங்க பேசுகையில், சோஷலிருந்தால் இன்றையஇக்கட்டான நிலைமை நாட்டுக்கு ஏற்பட்டிருக்காது என்று அவர் சொன்னார். காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி.பண்டாரநாயக்கா கொள்கையளவில் ஏற்றுக் கொண்டவைகளும், திருமதி பண்டாரநாயகா ஆரம்பித்து வைத்துவைகளுமான அபிவிருத்தித்திட்டங்களைத் திறந்து வைப்பதிலேயே முன்னைய அரசு மகிழ்ச்சி கொண்டிருந்தது என்று அவர் சொன்னார்.

உடுவில் எம்.பி திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில், வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதித்தொகை போதவில்லை என்று குறிப்பிட்டார்.

...ளர் தெரிவித்ததைத் தொடர்ந்து அரசாங்கம் இந்தநடவடிக்கையை எடுத்துள்ளது.

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் உதவி அமைச்சர் திரு லஷ்மன் ஜெய...காடி இத் தகவல்களை இன்று நிருபர்கள் மகாநாட்டில் தெரிவித்தார்,

முன்னைய அரசாங்கத்தினுல் நாட்டுக்குச் சிறந்த சேவை செய்தவர்கள் என்ற இந்திய நகை வியாபாரியான முகமத் பக்கீர் என்பவருக்குஅரசாங்கம்விடுத்த உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில்அவர் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை முடியும்வரை அவரை நாடு கடத்த வேண்டாமென கோர்ட்டார் இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளனர். (சி பி.ஏ)

முறையில் கட்டுவதற்கும் ஒழுங்குகள் செய்து தரவும் மாநகரசபை முன்வந்துள்ளதாகத் தெரிகிறது.

10 இலட்சம் ரூபா சோலைவரியாக அறவிடப்படாமலிருப்பதால்பொருட்களை நடுக்கட்டுவதன் மூலமும் பின்னர் பொருட்களை விற்பதன் மூலமும் சோலைவரியை அறவிட வேண்டிய தவிர்க்கமுடியாத நிலை உருவாகிவிட்டதாகவும் இது விடயத்தில் வரி

# துப்பாக்கி உபயோகத்தில் துஷ்பிரயோகம்?

யாழப்பாணம், வியா.

'லைசென்ஸ் பெற்ற துப்பாக்கி வைத்திருப்பவர்கள் தகுந்த முறையில் அவற்றை உபயோகிக்கின்றனரா என்பதுபற்றி ஆராய்ந்தறிவதற்கு அரசாங்கம் இப்பொழுது தீவிரமாக நடவடிக்கை எடுத்துள்ளது

துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் ஈடுபடுத்தப்படும் பலதுப்பாக்கிகள் லைசென்ஸ் பெற்றவைகள்என்று கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் அண்மையில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்குஉபயோகிந்கப்பட்ட துப்பாக்கிக்கு லைசென்ஸ் இருப்பதாகவும் அதை உரிமையாளர் அச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்தாமல்வேறொருவரால் பாவிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதாம்.

துப்பாக்கிகளுக்குவழங்கப்பட்ட லைசென்சுகள் தகுந்த முறையில் வழங்கப்பட்டுள்ளதா? பாவனையாளர்கள் துஷ்பிரயோகம் செய்கின்ற என்பது பற்றிய விசாரணை நடத்தும்படி அரசாங்கம் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் மட்டும் சுமார் 2000 லைசென்ஸ் துப்பாக்கிகள் இருக்கின்றன. வவுனியா மாவட்டத்தில் 2300துப்பாக்கிகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது,

துப்பாக்கி அவசியமில்லாதவர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டிருந்தால் அவற்றை உடனடியாக ரத்துச் செய்யப்படலாம் என்றும் தெரிகிறது,

# பண பதுக்கலை முறியடிக்க விரைவில் புதிய திட்டம்

## சபையில் என். எம். தகவல்

ரூபாய் நோட்டுக்களைப் பதுக்கி வைத்திருக்கிறவர்களை கண்டுபிடிக்கவும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவும் புதிய திட்டம் ஒன்றை விரைவில் கொண்டுவரவிருப்பதாக நிதியமைச்சர் டாக்டர் என். எம்,பெரேரா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் கூறினார்,

வரவுசெலவுத் திட்டத்தின் விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய டாக்டர் பெரேரா குறிப்பிட்ட தொகைக்குமேல் ரூபாய் நோட்டுக்களை பயன்படுத்த முடியாதபடியும் பெருந் தொகைப்பணம் தேவைப்படும்போது வங்கிகளின் மூலமும் காசுக்கட்டளைகள் மூலமும் பணம் கொடுக்கல் வாங்கலுக்கு வசதிசெய்வது பற்றியும் மந்திரிசபை ஆராய்ந்து வருவதாகவும் விரைவில் இத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் டாக்டர் பெரேரா தெரிவித்தார்.

# பட்ஜட் நிறைவேறியது

கொழும்பு,புதன்

வரவு-செலவுத்திட்டம் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று இரண்டாவது தடவையாக நிறைவேறியது. சாதகமாக 116பேரும் எதிர்த்து 8 பேரும் வாக்களித்தனர்.

தமிழரசுக் கட்சியினர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. தமிழ்க் காங்கிரஸ் கட்சி உறுப்னர்கள் ஆதரித்து வாக்களித்தனர். காலி எம். டாக்டர் தஹநாயக்கா, மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. ராஜன் செல்வநாயகம் போன்றவர்களும் ஆதரித்து வாக்களித்தனர்.

# பாப்பரசர் இலங்கைக்கு வருவது ஊர்ஜிதம்

கோட்டை,புதன்

பரிசுத்த பாப்பாண்டவர் அடுத்த மாதம் 4-ம் திகதி இலங்கைக்கு வருகை தருவது உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கர்தினல் குரே அண்மையில் வத்திக்கானுக்கு விஜயம் செய்தபொழுது பாப்பரசரின் இலங்கை விஜயம் ஊர்ஜிதம் செய்யப்பட்டதாக அறியப்படுகின்றது.

கர்தினல் குரே இன்று கொழும்பு திரும்பினார்.

டிசம்பர் மாதம் 4-ம் திகதிகாலையில் சுமார் ஏழு அல்லது எட்டு மணியளவில் பாப்பரசர் கட்டுநாயக்கா விமானநிலையத்தில்வந்திறங்குவார்.

இலங்கை கவர்னர் ஜெனரல் திரு வில்லியம் கோபல்லவா பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கர்தினல் குரே ஆகியவர்கள் அவரை வரவேற்பார்கள் பின்னர் பாப்பாண்டவர் மோட்டார் வாகனத்தில் பவனியாக அழைத்துச் செல்லப்படுவார். அவரைத் தரிசிப்பதற்காக வரவிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களுக்காக கட்டுநாயக்கா விமானநிலையத்திலுள்ள மைதானத்தில் பாப்பாண்டவர் விசேஷ பலிபூசையொன்று நடத்துவார்.

சுமார் மூன்றுமணி நேரம் இலங்கையில் தங்கிய பின்னர் பாப்பரசர் வத்திக்கான் திரும்புவார்.

யாழ்ப்பாணம், வியா.

கோண்டாவில் கிழக்கு அரசினர் இராமகிருஷ்ண வித்தியாலய பெற்றோர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்றுமாலை 4-30 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

# நல்லூரில் எமசங்காரம்

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர் சிவன்கோயிலில் நாளை 13 ந் திகதி வெள்ளிக்கிழமை எமசங்கார உற்சவம் நடைபெறுகிறது மாலை 3 மணிக்கு மார்க்கண்டேயர் சிவபெருமானுக்கு மகாமிருத்யுஞ்சய சிவபூசை காட்சி. பின்னர் எமகிங்கரன் மார்க்கண்டேயரைத் துரத்துதல். வசந்த மண்டப பூசை மாலை 4-30க்கு எமசம்ஹாரகாட்சி ஆரம்பித்து 5-45 வரை நடைபெறும். இந்த நிகழ்ச்சிகள் மாலை 4 மணியில் இருந்து 6 மணி வரை இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் நேர்முக வர்ணனை அஞ்சல்செய்யும்.

# இடமாற்றம்

பருத்தித்துறை, புதன்

பட்டதாரி ஆசிரிய நியமனத்தின் கீழ் திரு. எஸ். ஜெயராஜா என்பவர் இம் மாதம் 15-ம் திகதி தொடக்கம் நெல்லியயடிமத்திய மகாவித்தியாலயத்தில் நியமிக்கப்பட்டுள்ளார் திருமதி பொன்னம்மா தணிகாசலம் இம்மாதம் தொடக்கம் பருத்தித்துறை மெறடிஸ்த உயர்தரக் கல்லூரியிலிருந்து கரவெட்டி மாணிக்கவாவக வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

# இன்று 'கீதைஅமுதம்' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், வியா

திரு செ தனபாலசிங்கன் எழுதிய 'கீதை அமுதம்' நூல் வெளியீட்டு விழா இன்று மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நிகழவிருக்கிறது

தபால் தந்தி அமைச்சர் திரு செ குமாரசூரியர் தலைமையில் நடைபெறும் விழாவில் பேரறிஞர் திரு கி வா ஜகந்நாதன் பிரதம பேச்சாளராகக் கலந்துகொள்ளுகிறார் திரு சண்முகசுந்தரம் குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும் விழாவில் கொழும்பு இந்து கனிஷ்ட பாடசாலை அதிபர் திரு பொ நல்லையா வரவேற்புரை நிகழ்த்துவார் திரு செழியன் பேரின்பநாயகம் பாராட்டுரை வழங்குவார் திருமதி மகேஸ்வரி திலகலிங்கம் முதற்பிரதியைப் பெறுவார் பேராசிரியர் கலாநிதி சு வித்தியானந்தன், திரு கி வா ஜகந்நாதன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர்

சுன்னாகம் திருமகள் அழுத்தக அதிபரும், நூல் அச்சிட்டாளருமான திரு முசபாரத்தினம் இவ்விழாவில் கௌரவிக்கப்படுவார்

# விறகு தட்டுப்பாடு

சங்கானை, புதன்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இயங்கி வரும் சங்கானை மரக்காலையில் கடந்த சில மாதங்களாக விற்பனைக்கு விறகு இல்லையாம். இது சம்பந்தமாக சங்கானை பட்டின சபை யாழ். மாவட்ட மரக் கூட்டுத்தாபன அதிபருக்கு அவசரத் தந்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

# தம்பிரானுக்கு சென்னை அழைப்பு

யாழ்ப்பாணம், வியா

திருஞானசம்பந்தர் ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளுக்கு சென்னை தமிழ்இசைவிழாவில் கலந்து கொண்டு, கதாகாலட்சேபம் நடத்துமாறு அழைப்புக் கிடைத்துள்ளது. வருகிற டிசம்பர் மாதம் 27-ம் திகதி இரவு 8 மணி முதல் 9-30 வரை "இசையும் இறைவனும்" எனும் விஷயமாக அவர்கள் கதாப் பிரசங்கம் செய்வாரென்று தெரிகிறது.

# லூனா-17 விரைகிறது

மாஸ்கோ, நவ. 11

சந்திரனையும் சந்திரனின் வெளிப்பகுதியையும் விஞ்ஞான ரீதியாக ஆராயும் பொருட்டு ரஷ்யா லூனா-17 ஆளில்லாக் கலத்தை விண்வெளிக்குஅனுப்பிவைத்துள்ளது இக்கலத்தின்சகல பாகங்களும் ஒழுங்காக இயங்குவதாக சோவியத் செய்தி ஸ்தாபனமான டாஸ் தெரிவித்தது. அக்கலம் சந்திரனை நோக்கி விரைந்து கொண்டிருக்கிறது

இதே வேளையில்அமெரிக்கா விண்வெளிக்கு அனுப்பிவைத்த 2 தவளைகளும் நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பதாக அமெரிக்கச் செய்திகள் கூறுகின்றன.

## மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# முதலாவது எதிர்மனுதார் தரப்பு சாட்சியங்கள் முடிவடைந்தன

# ஐந்தாவது எதிர்மனுதார் சாட்சியமளிக்கவில்லை

யாழ்ப்பாணம், வியா.

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கில், நேற்று முதலாவது எதிர் மனுதார் (அழகக்கோன்) தரப்பு சாட்சியங்கள் முடிவடைந்தன. முதலாவது எதிர்மனுதார் தரப்பில் மன்னார் பட்டினசபைச் செயலாளர் அ வே வெற்றிவேலு, தமிழரசுக் கட்சிப் பொதுச்செயலாளர் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம், மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினர் வி ஏ அழகக்கோன் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

மன்னார்தேர்தல் ஆட்சேப வழக்கு யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் கடந்த 20 தினங்களாக விசாரணை செய்யப்பட்டுவருகிறது

மனுதாரரான ரஹிம் சார்பில் அட்வகேட் இசடீன் முகமட் கியூ சி, அட்வகேட் குரொசட் தம்பையா, அட்வகேட் சகிது ஆகியோரின் உதவியுடனும், புறக்டர் சகிட்டின் அனுசரணையுடனும் ஆஜரானார். முதலாவது எதிர் மனுதாரரான அழகக்கோன் சார்பில் அட்வகேட் எம் திருச்செல்வம் கியூ சி, அட்வகேட் எச் டி தம்பையா, அட்வகேட் எஸ் சிவானந்தன், அட்வகேட் எம் ஆலாலசுந்தரம் ஆகியோரின் உதவியுடனும், புறக்டர் பாலசுப்பிரமணியத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார். 3-வது எதிர் மனுதாரரான தேர்தல் அதிகாரி சார்பில் முடிக்குரிய வழக்கறிஞர் ஜ பி எஸ் பி சில்வா ஆஜரானார்

5-வது எதிர்மனுதாரரான வைத்திலிங்கம், தான் சாட்சியமளிக்கவில்லையென்றும் தனக்கு வேறு சாட்சியங்கள் இல்லை என்றும் நேற்று நீதியரசரிடம் தெரிவித்தார்

மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் இஸடீன் மொகமட் நேற்று தொடர்ந்து சாட்சியமளித்த அழகக்கோனை குறுக்கு விசாரணை செய்தார்

நேற்று நடந்த முழு விசாரணையின் விபரமும் 14-ம் திகதி சனிக்கிழமை ஈழநாடு பத்திரிகையில் வெளிவரும்,

இம்மாதம் 14-ம் திகதி காலை 9-30 மணிவரை விசாரணை ஒத்திப்போடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

கிளிநொச்சிப் பகுதியில் விளைநிலம் குத்தகைக்கு அல்லது ஒற்றிக்குத் தேவை. முற்பணம் உண்டு. தொடர்புகொள்க. 47 3/2, காங்கேசன்துறை வீதி, வண்ணார்பண்ணை. 2508

### விற்பனைக்கு

கண்டிவீதி கைதடிச் சந்திக்கும் ஆயுள்வேத வைத்திய சாலைக்கும் பக்கத்தில் 7·1/2 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் லலிதாம்பிகை ஸ்ரோர் கைதடி என்றவிலாசத்தில் தொடர்பு கொள்ளவும். 2507


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 12—11—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 குரல்வகை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்மன்றம்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 விவசாயநிகழ்ச்சி, 6·45 வீட்டுவைத்தியம், 7-00 நாட்டுப்பாடல்கள், 7-30 வயலின். 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
ரவிச்சந்திரன்—காஞ்சனு நடித்த
அதே கண்கள்


## அறிவித்தல்

திகதி மாற்றம்

கொக்குவில் மேற்கு சைவ வாலிபர் சங்கம் ஷெ சங்கக் கட்டிடநிதிக்காக 13-11-70ல் நடைபெற விருந்த குமாரி லீலா நாராயணனினதும் மாணவிகளினதும் பரதநாட்டிய நிகழ்ச்சி தவிர்க்கமுடியாத சில காரணங்களால் 12-12-70 சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுமென்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இதனால் ஏற்படும் சிரமங்களுக்கு எமது அன்பர்கள் ஆதரவாளர்களிடம் மன்னிப்புக் கோருகின்றோம்.

சைவ வாலிபர் சங்கம்
2545

### நாவலர் குரு பூஜை

கொழும்புத்துறை, புதன் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நாவலர் குருபூஜை இம்மாதம் 22-ம் திகதிநடைபெற விருக்கிறது அன்றைய தினம் அன்னதானமும் நடைபெறவிருக்கிறது.

... ...

### ஆலோசனை

திருநெல்வேலி. புதன் நல்லூர் வடக்கு ஸ்ரீ கணேச வித்தியா விருத்திச் சங்க மண்டபத்தில் இம்மாதம் 15-ம் திகதி மாலை நல்லூர் வடக்கு சனசமூக நிலைய வளர்ச்சி பற்றி ஆலோசிக்கப்படவுள்ளது.

... ...

### பௌர்ணமி விழா

தாவடி. புதன் கோண்டாவில் மஞ்சத்தடி விவேகானந்தா கிராம முன்னேற்றச் சங்கத்தின் 11-வது பௌர்ணமி தின விழா இம்மாதம் 13-ம் திகதி நடைபெறும்போது. கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை "திருவாசகம்" என்னும் பொருள்பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.


## ஸ்ரீகாலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ஜெய்சங்கர் - வசந்தா நடித்த
இரவும் பகலும்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா சோ — மனோரமா நடித்த


## மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# "பெரும்பாலான முஸ்லிம்கள் எனக்கு எதிராக இருந்தனர்"

# அழகக்கோன் தொடர்ந்து சாட்சியம்

( நீதிமன்ற நிருபர் கா. யோகநாதன் )

யாழ்ப்பாணம், வியாழன்

'முருங்கனில் கூட்டம் நடந்த இடத்துக்குப் போனதும் முதலில் தமிழரசுக்கிளைக் காரியாலயம் ஒன்றைத் திறந்துவைத்தேன். அதன்பின் கூட்டம் நடந்தது கட்சி ஆதரவாளரான திருச்செல்வம் தலைமைவகித்தார். அங்கு சுற்றிவர கதிரை போடப்பட்டிருந்தது. மேசையும், ஒலிபெருக்கியும் இருந்தன. தலைவர் முதலில் பேசினார். அதன்பின் டானியல் ரேச் பேசினார். அவரைத் தொடர்ந்து ராஜம் புஷ்பம் பேசினார். இவரையடுத்து எருப்பிட்டி இளம் வாலிபர் ஜேசுதாசன் பேசினார் அதன்பின் நான் பேசினேன்; நான் பேசியபின் அங்குவந்திருந்த அடம்பன் ஆட்கள் என்னைக் கூட்டிச்சென்றனர். நான் போகுமுன் வைத்திலிங்கம் பேசவில்லை''

மன்னார்தேர்தல் ஆட்சேப வழக்கில் எதிர் மனுதாரரான மன்னார் எம். பி. புறக்டர் வி ஏ அழகக்கோன் மேற்கண்டவாறு கூறினார்

இவ்வழக்கு யாழ்ப்பாணம் தேர்தல் நீதிமன்றத்தில் நீதியரசர் வின்சன் ராமோரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகிறது.

இவ்வழக்கில் மன்னார் ஆட்சிமன்ற உறுப்பினராக திரு. வி ஏ அழகக்கோன் தெரிவுசெய்யப்பட்டதை ஆட்சேபித்து மன்னாரில் யூ என் பி அபேட்சகராகப் போட்டியிட்ட மன்னார் பட்டினசபைத் தலைவர் ரஹிம் தாக்கல்செய்த மனு விசாரணை செய்யப்பட்டு வருகிறது

எதிர்மனுதாரரான அழகக்கோன் மேலும் கூறியதாவது:-

நான் அடம்பனுக்குப் போனபோது என்னுடன் டானியல் ரேச்சும், ராஜன் புஷ்பவனமும் வந்தார்கள். அடம்பனிலும் ஒரு கிளைக் காரியாலயம் திறந்தேன். முருங்கன் கூட்டத்தைவிட்டுப் போகும் போது அங்கு வைத்திலிங்கத்தைக் கண்டேன். நான் அடம்பனுக்குப் போன பின் முருங்கன் கூட்டத்திற்குத் திரும்பி வரவில்லை.

### நோய்கள் மாறவில்லை

1965-ம் ஆண்டு எனது வலது கண்ணில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. தாக்கல் செய்யப்பட்டது. அன்றைய தினம் அவரை அங்கு கண்டேன். மனுதாரரான ரஹிமுடன் வந்திருந்தார். டானியல் ரேச்சை தெரியும். அவர் பள்ளிமுனையிலிருப்பவர். அவர் ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியர். தமிழரசுக் கட்சி ஆதரவாளர் நியமன தினம் முடிந்ததும் நானும் வைத்திலிங்கமும் பிரான்சிசும், அஸிஸும் அவர் வீட்டிற்குப் போகவில்லை. தேர்தல் சமயம் நான் பனங்கட்டி கொட்டுக்குப்போகவில்லை.

### ஆதரவு தேடவில்லை

மன்னார் பெரியகடைப்பகுதியில் நான் வைத்திலிங்கத்துடனும், அஸிஸுடனும் ஆதரவு தேடவில்லை' நான் அஸிஸுடன் உயிலங்குளம் போகவில்லை தேர்தல் சமயத்தில் எனது மனைவி வீட்டிற்கு வீடு ஆதரவு திரட்டச் சென்றார். என் பிள்ளைகளுடனும் சொந்தக்காரர்களுடனும் என் மனைவி மன்னாரில் ஆதரவு திரட்டினார். மன்னார் பட்டின எல்லைக்கு வெளியில் அவர் ஆதரவு திரட்டச் செல்லவில்லை.

இக்கூட்டத்தில் அழகக்கோனை கதிரையில் அமர்ந்து சாட்சியமளிக்கும்படி நீதியரசர் தெரிவித்தார்.

அழகக்கோன் மேலும் கூறியதாவது: அசிஸ் மரைக்காயர் [illegible] கூறப்பட் [illegible] யும். அவரது முழுப்பெயர் [illegible]துல் மொகதீன் அப்துல்

கூட்டம் பற்றியும் கதைத்தேன். கப்பா பிச்சையின் மகன் கபீர் அக்கூட்டத்திற்கு தலைமை தாங்குவதென முடிவாகியது. கபீரை வந்து சந்திக்கும்படி நான் கப்பா பிச்சைக்கு அறிவித்தேன். அவர் என்னை வந்து சந்தித்தார். மே மாதம் நடுப்பகுதியில் ஒரு வெள்ளிக்கிழமை அவருடன் பேசினேன். தாராக்குண்டு கூட்டம் பற்றி அன்று முடிவாகியது. அக்கூட்டத்திற்கு தலைமை தாங்க அவர் சம்மதித்தார்: மே 23-ம் திகதி இருகூட்டங்களும் நடந்தன. எருக்கலம்பிட்டி கூட்டத்திற்கு கப்பா பிச்சையும், தாராக்குண்டு கூட்டத்திற்கு கபீரும் தலைமை வகித்தனர்.

### பள்ளிக்குள் செல்லவில்லை

தாராக்குண்டு பள்ளிபற்றி இங்கு சாட்சியமளிக்கப்பட்டது தெரியும் தேர்தல் சமயம் மே மாதம் நடுப்பகுதியில் ஒரு வெள்ளிக்கிழமை தாராக்குண்டு பள்ளிக்குப் போனேன். நான் பள்ளிப் படலைக்குள்ளே போகவில்லை. பள்ளி வாசல் வளவிற்குள்ளும் நிற்கவில்லை. நான்பள்ளிக்குள்ளே செல்லவே இல்லை. மன்னாரி[illegible]ந்து மீரான் ஜும்மா பள்ளிக்கு செல்வதால் உசேனிய [illegible] கடந்து செல்ல [illegible]யதில்லை, கடைக்குப் பக்கத்தில் நேட்டீஸ் தந்த[illegible]

வது தேர்தல் பிரசாரக் கூட்டம் நடந்தது. உள்ளூர் பேச்சாளர்கள் பேசினார்கள். முக்கிய பேச்சாளராக தமிழரசு பொதுச் செயலாளரான அமிர்தலிங்கம் கலந்து கொண்டார். வவுனியா அபேட்சகர் பேசவில்லை. 5-30 மணியளவில் நான் கூட்டம் நடைபெறும் இடத்திற்குச் சென்றேன். அங்கு மேடை இல்லை, அடம்பன் கூட்டத்தில் வைத்திலிங்கம் பேசினார்; அப்போது நான் கூட்டத்திலிருந்தேன். நானாட்டானில் ஒரு கூட்டம் வைத்தேன். சிரேஷ்ட வழக்கறிஞர் திருச்செல்வம் அக் கூட்டத்திற்கு வந்தார். அங்கு மேடை இல்லை நான்தான் அங்கு கடைசி பேச்சாளன். எனக்குமுதல் திருச்செல்வம் பேசினார். அக்கூட்டம் 10-30 மணிக்குப் பின் முடிந்தது. அங்கிருந்து மன்னாருக்கு புறக்டர் ஜெயராசா வீட்டில் இரவு சாப்பாட்டுக்கு வந்தோம். அன்றிரவு கட்டை காட்டில் கூட்டம் நடக்கவில்லை.

### குறுக்கு விசாரணை

இக்கட்டத்தில் மனுதாரர் சார்பில் ஆஜரான அட்வகேட் இஸடீன் முகமட் சாட்சியமளித்த அழகக்கோனை குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: மூன்றுதடவை மன்னார் பட்டினசபை தலைவராக இருந்தீர்? ஆம்

வழ: தொடர்ந்து மூன்று தடவையா?- 2 தடவை தொடர்ந்து.

வழ: எப்பொழுது தொடக்கம் எம். பியாக இருந்தீர்?-1956 தொடக்கம் நான் எம். பியாக வந்ததும், தலைவர் பதவியிலிருந்து விலகி, வேறு ஒருவர் தலைவரானார்.

வேண்டும். இதுதான் எனக்கு ஞாபகம்

வழ: நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஏன்கொண்டு வந்தார்கள்?- இதுதான் எனக்கு ஞாபகமிருக்கிறது. சபைக்கு சேரும் பணத்தை நான் அபிவிருத்திக்குசெலவு செய்வதில்லை'

வழ: மெம்பர்கள் கூட்டத்தில் அல்லது வெளியில் புகார் செய்தார்களா?- இல்லை

வழ: புகார் ஒன்றும் இல்லையா?- சபைக்கு வரும் பணத்தை நான் அபிவிருத்திக்கு செலவிடுவதில்லை என எனக்குக் கூறப்பட்டது. கடன் இருக்கிறது. முதலில் அது கொடுபட வேண்டும் என்பதற்காகவே செலவளிக்கவில்லை.

வழ: மெம்பர்கள் தனியாக அல்லது கூட்டாக புகார் செய்யவில்லையா? இல்லை

வழ: இப்பிரேரணைபற்றி என்ன நினைத்தீர்?- நான் ஆச்சரியப்படவில்லை என்னை இறக்க ஒரு குழு இருந்தது.

நீதி: நீர் ஆச்சரியப்படவில்லை?-ஆம் நம்பிக்கையில்லாப் பிரேரணை அறிவித்தல் எனக்குத் தரப்படவில்லை. உதவி உள்ளூராட்சி ஆணையாளரிடம் கொடுபட்டன

வழ: எப்பொழுது இதனை அறிந்தீர்?- அவர் என்னுடன் தொடர்புவைத்தபின்.

வழ! யார் கூட்டத்திற்கு தலைமை தாங்கியது?- அவர்தான் என்று நினைக்கின்றேன், நான் நீண்ட பிரசங்கம் செய்தேன்' எனக்கு இப்போ ஞாபகமில்லை'

### எனக்கு ஞாபகமில்லை

நீதி; எப்பொழுது கடைசியாகப் பட்டினசபைத்தலைவராக இருந்தீர்?- ஞாபகமில்லை. எம் பியாக வந்தபின் கொஞ்சக்காலம் தலைவராக இருந்தேன்.

வழ:- எம் பியாக எப்போது வந்தீர்?-1956-ல்

வழ: 1960-ம் ஆண்டுபட்டினசபையில் இருந்தீரா?- இருக்கலாம். ஞாபகமில்லை'

வழ: அடுத்த சபையில் நீர் அங்கத்தவராக இருக்கவில்லை?- எம் பியாக வந்தபின் நான்போட்டியிடவில்லை,

வழ: நீர் தலைவராக இருந்தபோது மின்சார உற்பத்தியந்திரம் வாங்கப்பட்டது?-ஆம்.

வழ: ஆடிட் இதுபற்றி வழக்கம்.

நீதி: நீர் மின்சார இலாகாவின் முடிவுக்கு விட்டீர்?- ஆம்,

வழ: நீர் தலைவராக இருந்தபோது மின்சார சுப்பிரின்டனால் 40,000 ரூபா என மதிப்பிடப்பட்ட மின் உற்பத்தி இயந்திரத்தை 50,000 ரூபாவிற்கு வாங்க நீர் அனுமதியளித்தீர் என உமக்கு எதிராக ஒரு குற்றச்சாட்டு இருந்தது?- அது உண்மையில்லை.

வழ; கொந்தராத்துக்காரர் ஞானரத்தினத்திடம் இருந்து வைப்புப் பணம் பெற தவறிவிட்டீர்?- இல்லை

நீதி: யார் தீர்மானிப்பது?- சபை தீர்மானிக்கலாம்

நீதி: யாரிடம் வாங்கியது. ஒரு தமிழரிடமிருந்து. பெயர் தெரியாது.

வழ: மின்சார சுப்பிரின்டனின் அத்தாட்சிப் பத்திரமில்லாமல் நீர் தவணைப் பணம் கொடுத்ததாக உம் மீது குற்றச்சாட்டு இருந்தது? இல்லை.

வழ: யந்திரம் வாங்கிய காலம் முதல் அதனை இயக்குவதற்கு காலதாமதமேற்படுத்தியதாக உம்மீது குற்றச்சாட்டு இருந்தது?- குற்றச்சாட்டு இல்லை: மின்சார சுப்பிரின்டன் காலதாமதப்படுத்தியிருக்கலாம்.

வழ: இந்தக் குற்றச்சாட்டுகளால் தான் தலைவரை நீக்கியது?- நான் மறுக்கிறேன்.

வழ: காரணமில்லாமல் நீர் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டீர்?-ஆம்.

வழ: மின் உற்பத்தி யந்திரம் பற்றி புகார் செய்யப்படவில்லை?- இல்லை.

வழ: இது பற்றி ஆடிட் இலாகா தொடர்பு வைத்ததா?- ஞாபகமில்லை.

வழ: விளக்கம் கொடுக்காவிடில் சார்சார்ஜ் செய்யப்படவிருந்ததா?- சார்சாஜ் நடக்கவே இல்லை.

வழ: ஆடிட் ஏதாவது விசாரணை நடாத்தியதா?- எனக்கு ஞாபகமில்லை.

வழ: அப்படி நான் உத்தேசித்தால் அதை நீர் மறுக்கிறீரா?-ஆம்.

வழ: மன்னார் நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் 1950ல் சாட்சியமளித்தது ஞாபகமிருக்கிறதா?- ஞாபகமில்லை

வழ: முகமட் சம்பந்தமாக?- ஞாபகமில்லை:

வழ: விசாவிற்கு விண்ணப்பித்த ஒருவருக்கு நீர்

# 'அடம்பனுக்கு நான் போகு முன் வைத்திலிங்கம் பேசவில்லை'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அதே கண்கள் | இரவும் பகலும்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன்-புஷ்பலதா
சோ — மனோரமா
நடித்த
**செல்லப்பெண்**

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் — லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த
**மாட்டுக்கார வேலன்**

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி-சரோஜாதேவி
சோ-மனோரமா
நடித்த
**ஐந்து லட்சம்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 10-00
போயா நாட்கள் 10-30 மெற்னி
கெப்பிட்டல் (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை)
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணி
நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 125-வது
உயர்ந்த சித்திரம்




சிவாஜிகணேசன் - சௌகார்ஜானகி
அசோகன், வாணிஸ்ரீ, சிவகுமார், பாரதி
வி. நாகையா — ஜி. சகுந்தலா
மற்றும் பலர் நடித்த
**உயர்ந்த மனிதன்**
கதை வசனம்: ஜாவர் சீதாராமன். பாடல்: வாலி.
இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

வில்லை.

## நோய்கள் மாறவில்லை

1965-ம் ஆண்டு எனது வலது கண்ணில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது. அது வெற்றிகரமாக முடிந்தது அதன்பின் என்னால் கண்ணாடியில்லாமல் பார்க்க முடிந்தது. 1969-ம் ஆண்டு இடது கண்பார்வைபோய் கண்ணாடி போட்டும் பார்க்க முடியாமலிருந்தது 69-ல் வயிற்றுக்கோளாறும் ஏற்பட்டது பெரிய ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றேன். இச்சிகிச்சை வெற்றியளிக்கவில்லை ஹோப் கப்பலிலும் சிகிச்சைபெற்றேன். டாக்டர்களால் எதுவும் செய்ய முடியவில்லை. எனக்கு நீரழிவு நோய் 10 வருடமாக இருந்து வந்து. 1970-ம் ஆண்டு கண்வருத்தமும் மற்றும் நோய்களும் அப்படியே இருந்தன

1970-ம் ஆண்டு தேர்தலில் நான் வீட்டுக்கு வீடு சென்று ஆதரவு தேடவில்லை பல பகுதிகளுக்கும் சென்று துண்டுப்பிரசுரம் கொடுக்கவில்லை. மக்களை என்பக்கம் திருப்ப முயற்சிக்கவில்லை; மற்றவர்களுடன் சென்று பிரசாரம் செய்யவில்லை.

ஆதம்லெப்பை இங்கு சாட்சியமளித்தது தெரியும். அவரை நேரடியாகத் தெரியாது. நான் ஆதம்லெப்பை வீட்டிற்குப் போகவில்லை. மொகடீன் பாபா இங்கு சாட்சியமளித்தது தெரியும், நான் அஸிஸுடன் வாக்குத் திரட்டச் செல்லவில்லை. ஜேச் ஆனந்தம் இங்கு சாட்சியமளித்தார். அவரை எனக்குத் தெரியும். 65-ம் ஆண்டு அவர் என்னை ஆதரித்தார். அந்த வருடம் அவர் மன்னார் தமிழரசுக் கிளைத் தலைவராக இருந்தார் இரண்டு மூன்று வருடங்கள் இருந்தார். அதன்பின் அவருடைய தொடர்பில்லாமலிருந்தது மன்னார் கச்சேரியில் நியமனப்பத்திரங்கள் [illegible] தெரிவித்தார்.

அழகக்கோன் மேலும் கூறியதாவது: அசிஸ் மரைக்காயர் என்று கோட்டில் கூறப்பட்டவரைத் தெரியும். அவரது முழுப்பெயர் இத்துல் மொகதீன் அப்துல் அஸிஸ். அவரது தகப்பனாரைத் தெரியும். அவரது பெயர் இத்துல் மொகதீன். அசிசை சிறுவராக இருந்த பொழுதிலிருந்து தெரியும். மரைக்கார் என்பது அவரது பெயரைசேர்ந்ததல்ல. அவரது மூத்த சகோதரரை தெரியும். அவரது பெயர் மீரா சாகிபு மரைக்கார். ரஹிமின் மாமனாரைத் தெரியும். அவரது பெயர் என். எம். அப்துல் காசிம்மரைக்கார் 30 அல்லது 40 வருடங்களாக அவரைத் தெரியும். மரைக்கார் என்பது அவருடைய பெயரைச் சேர்ந்தது.

## ரஹீமை ஆதரித்தார்

65- ஆண்டு தேர்தலில் அசிஸ்மனுதாரான ரஹிமை ஆதரித்தார். நியமன தினத்தன்று 3 சோடி நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்தேன்: ஒரு சோடியில் அசிஸ் அனுமதிப்பவராக கையெழுத்திட்டார். நியமன தினம் அவர் என்னுடன் கச்சேரிக்குவந்தார். தேர்தலில் அவர் எந்தவிதத்திலும் எனக்கு உதவி செய்யவில்லை அவர் பல பகுதிகளுக்கும் சென்று பிரசாரம்செய்யவில்லை. துண்டுப் பிரசுரங்கள் வழங்கவில்லை. மக்களை என்பக்கம் திருப்பவில்லை, அவரது பெயரில் அல்லது வேறு எவரின் பெயரிலும் தேர்தலின்போது துண்டுப்பிரசுரம் வெளியிட நான் அனுமதிகொடுக்கவில்லை. மன்னாரில் 50 அல்லது 60 கூட்டங்கள் நடந்தது கட்சி ஆதரவாளர்கள் இக்கூட்டங்களை ஒழுங்கு செய்தனர். நான் இரண்டு கூட்டங்களை ஒழுங்குசெய்தேன். முஸ்லிம் பகுதியான எருக்கலம்பிட்டியிலும், தாராக்குண்டிலும் ஒழுங்கு செய்தேன்.

எருக்கலம்பிட்டியில் ஓ. எம் கப்பா பிச்சையின் உதவியைப்பெற்றேன். அவரும் நியமனப்பத்திரமொன்றில் பிரேரிப்பவராக கையெழுத்திட்டார். நான் அவருக்குப் போன்பண்ணினேன். அவர்வீட்டிற்குவந்து சந்தித்தார். கூட்டங்கள் ஒழுங்குசெய்வது பற்றி அவருடன் கதைத்தேன் மே மாதம் நடுப்பகுதியில் இது நடந்தது. கூட்டம் வைப்பதென்றும் அவர் தலைமை தாங்குவதென்றும் முடிவானது. நான் அவருடன் கதைத்து கூட்டம் வைக்கும் திகதியை மே 23 என முடிவு செய்தேன் தாராக்குண்டுக் [illegible] லவே இல்லை. மன்னாரி[illegible]ந்து மீரான் ஜும்மா பள்ளிக்கு செல்வதானால் உசேனிய பள்ளியை கடந்து செல்ல வேண்டியதில்லை, கடைக்குப் பக்கத்தில் நோட்டீஸ் தந்ததாக சுல்தான் செ[illegible]வது உண்மையல்ல; நான் அப்படி செய்யவில்லை. (நோட்டீஸ் அவருக்கு காட்டப்பட்டது)

## ஒரே ஒரு நோட்டீஸ்

இந்த நோட்டீசைத் தவிர நான் வேறு நோட்டீஸ் பிரசுரிக்கவில்லை. இதுதான் நான் வெளியிட்ட ஒரே ஒரு நோட்டீஸ். இந்த நோட்டீசில் கையெழுத்தும் என்படமும் இருக்கிறது. இது மன்னாரில் உள்ள அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பட்டது. 10,000 பிரதிகள் அச்சடித்தேன், 200 அல்லது 250 ரூபாய் இதற்குக் கொடுத்தேன். தேர்தல் முடிந்ததும் தேர்தல் செலவுகள் பற்றி அறிவித்தேன். அச்சுக்கூடத்திலிருந்து இதற்குப் பற்றுச்சீட்டு பெற்றேன். எனது துண்டுப்பிரசுரம் தான் எங்கும் விநியோகிக்கப்பட்டது. வேறு துண்டுப்பிரசுரம் விநியோகிக்க என் ஆதரவாளர்களுக்கு நான் அனுமதி கொடுக்கவில்லை. எவரும் எந்த துண்டுப் பிரசுரமும் வெளியிட நான் அனுமதிவழங்கவில்லை.

## மந்திரி வந்தார்

மஜித் மௌலவி இங்கு சாட்சியமளித்தது தெரியும். 66-ம் ஆண்டு நாளுட்டான் பள்ளியில் கடமையாற்றினார். நான் அந்தப் பள்ளிக்கு சென்றிருக்கிறேன். அந்தப் பள்ளியை சீர் செய்து மௌலவிகளுக்கு பயிற்சி அளிக்க ஓர் அராபிக் பாடசாலை உருவாக்கவேமென்றும், அதற்கு மந்திரி மகமட் அத்திபாரக்கல் நாட்ட வேண்டுமென்றும் கூறினார்கள். நான் அதற்கு ஒழுங்கு செய்தேன். மந்திரி வந்து அத்திபாரக்கல் நாட்டினார். அங்கு நடந்த கூட்டத்தில் மந்திரியும் நானும் பேசினோம் நான் அந்த பள்ளிக்கு சென்றது அது தான் ஒரே ஒரு தடவை. அவர்கள் அப்பள்ளியை சீர் செய்தார்கள்.

60-ம், 65-ம் ஆண்டுகளில் நான் எப்பொழுதாவது அந்தப் பள்ளிக்குப் போகவில்லை. அங்கு வாக்குகள் சேகரிக்கவில்லை. நான் ஒரு ரோமன் கத்தோலிக்கர் மற்ற சமயத்தையும் மதிப்பவன். அதனால் நான் பள்ளிக்குப் போகமாட்டேன்

## முதலாவது கூட்டம்

முருங்கன் சந்தையில் மே 10-ம் திகதி முதலா

REGAL
Jaffna
Daily 4-45, 7 & 9-45
Poya days 4 shows
Christopher Lee
in
NIGHT OF THE
BIG HEAT

MANOHARA
Jaffna
Daily 2-45, 6-30, 9-45 p m.
John Wayne
Richard Widmark
in
THE ALAMO
(Scope-color)

# 'அடம்பனுக்கு நான் போகு முன் வைத்திலிங்கம் பேசவில்லை'

வழ: மூன்றாவது தடவை எப்போ தலைவராக இருந்தீர்?-நான் எம். பியாக வந்தபோது.

வழ: எவ்வளவு காலம் தலைவராக இருந்தீர்? ஒரு வருடம்.

நீதி: மூன்றுதடவை தலைவராக இருந்தீர்?-ஆம்

நீதி: ஒருதடவை வேறு ஒருவர் தலைவரானார்?-ஆம்

நீதி: எந்தத்தடவை? கடைசித் தடவை,

வழ: கடைசித் தடவை எவ்வளவு காலம் தலைவராக இருந்தீர்?-1 வருடம்

வழ: உமக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டதா? ஆம்

வழ: அதுஎப்பொழுது? -முன்னர் என நினைக்கிறேன்

வழ: நம்பிக்கையில்லா தீர்மானம் வந்தபின் பட்டின சபையில் போட்டியிட்டீரா?-இல்லை

வழ: அதுதான் பட்டின சபையில் போட்டியிட்ட கடைசித்தடவை? நம்பிக்கையில்லா தீர்மானம் வந்த பின் தலைவராக தெரிவு செய்யப்பட்டேன்.

வழ: அதே சபையிலா? வேறு சபையிலா? அதே சபையில்

வழ: சபையில் எத்தனை மெம்பர்கள்? 7

வழ: 6 மெம்பர்கள் நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரித்தனர்? இருக்கலாம் எனக்கு ஞாபகமில்லை எத்தனை வாக்குகள் என்று.

வழ: நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர காரணம் என்ன? காரணம் இல்லை சும்மா கொண்டு வந்தனர்.

வழ: நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு எதிராக யாரும் வாக்களித்தார்களா? ஞாபகமில்லை

வழ: யாரும் வாக்களிக்கவில்லையா? எல்லோரும் எனக்கு எதிராக வாக்களித்தனர்.

வழ: அவர்கள் காரணம் காட்டினார்களா?-இல்லை

வழ: உமக்கு எதிராக வாக்களித்தவர் ஒரே இனத்தவரா அல்லது பல இனத்தவரா? தமிழரும் முஸ்லீம்களும்

நீதி: வாக்களிப்பு இனவாதத்தில் நடைபெறவில்லை?-இல்லை

## சட்டம் உண்டா?

வழ: தலைவரை நீக்குவதற்கு ஏதாவது சட்டம் உண்டா? மூன்றில் இரண்டு மேலதிகவாக்குகள் இருக்க விசாரணை செய்தது?- எனக்கு ஞாபகமில்லை.

வழ: கொந்தராத்துக்காரர் ஞானசுந்தரத்திடமிருந்து இந்த மின் உற்பத்தி யந்திரம் வாங்கப்பட்டது?-இருக்கலாம்.

வழ: ஞானசுந்தரத்தை உமக்குத் தெரியுமா?- எனக்கு ஞாபகமில்லை.

வழ: மின் உற்பத்தி யந்திரம் ஒன்று 50,000 ரூபாவிற்கு வாங்கப்பட்டதா-? வாங்கப்பட்டது எனக்கு ஞாபகமில்லை.

வழ: அந்த மின் உற்பத்தி யந்திரம் வாங்கப்பட்ட போது நீர் பட்டணசபைத் தலைவராக இருந்தீர்?- இருக்கலாம் எனக்கு ஞாபகமில்லை.

## முறைப்பாடு இல்லை

வழ: அந்த இயந்திரத்திற்குக் கூடிய தொகை வழங்கப்பட்டதாக ஏதாவது முறைப்பாடு இருந்ததா?-முறைப்பாடு இல்லை

வழ: நீர் தலைவராக இருந்தபோது வாங்கவில்லையா? எனது காலத்தில் ஒரு மின் இயந்திரம் வாங்கப்பட்டது. இதுதானா என்று தெரியாது

வழ: நீர் அனுமதியளித்தீரா?- மின்சார இலாகா தான் அனுமதியளிப்பது வழக்கம்.

வழ: அரசாங்க இலாகாவா?-ஆம்,

வழ: சபையில் மின்சார சுப்பிரின்டண் இருக்கிறார்?- எப்பொழுதும் மின்சார சுபிரின்டன் இருப்பார்.

வழ: நீர் அனுமதியளிக்கவில்லையா?- எப்பொழுதும் மின்சார இலாகாதான் இயந்திரத்தைப் போய்ப் பார்வையிட்டு வாங்குவது அத்தாட்சிப்பத்திரம் கொடுத்தது பற்றி?- எனக்கு ஞாபகமில்லை

வழ: ஜெயக்கொடி அப்பொழுது மாஜிஸ்டிரேட்டாக இருந்தார்?- ஞாபகமில்லை.

வழ: அது பற்றி நீர் சாட்சியமளித்தீர்?- எனக்கு ஞாபகமில்லை.

வழ: நீர் வழக்காளி தரப்பில் சாட்சியமளித்தீர்?-ஞாகமில்லை.

வழ: சாட்சியாக எப்படி அழைக்கப்பட்டீர்?- எனக்கு ஞாபகமில்லை.

வழ: அந்த வழக்கில் எதிரிக்கு அவர் இலங்கைப் பிரஜை என அத்தாட்சிப் பத்திரம் ஒன்றை நீர் வழங்கினீர்?-ஞாபகமில்லை

வழ: முகமட் கசிமை தெரியுமா?-தெரியலாம்.

வழ: அவரைத் தெரியுமா?- பல முகமட் இருக்கிறார்கள்.

வழ: அப்துல் கசிமை தெரியுமா? பலர் இருக்கிறார்கள்.

வழ: இந்த வழக்கில் முகமட்டுக்கு நீர் ஓர் அத்தாட்சிப்பத்திரம் கொடுத்தீர்?- ஞாபகதுல்லை.

வழ: அவர் அந்த வழக்கில் குற்றவாளியாகக் காணப்பட்டார்?- ஞாபகமில்லை.

வழ: நீர் கொடுத்த பத்திரமும், பிறப்புப் பத்திரமும் தவறானது?- ஞாபகமில்லை,

வழ: பல தடவை சாட்சியமளித்திருக்கிறீரா?- அளித்திருக்கிறேன்.

வழ: இந்த வழக்கில் அப்துல் கசிமின் சிபார்சின் பேரில் நற்சாட்சிப்பத்தி

(3-ம் பக்கம் பார்க்க)

## ஏலவிற்பனை

### இயந்திரப்படகு

நவாலி சென். பீற்றர்ஸ் கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான R. S. 15 இயந்திரப்படகும் உபகரணங்களும் 22-11-70 ஞாயிறு காலை 10 மணிக்கு காரைநகர் நீலங்காட்டுக் கடற் கரையில் பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படும்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்,
10-11-70;

ஓ. அகுஸ்தீன்
கௌரவ காரியதரிசி,
2548

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனரல் டிகாலின் இறுதிச் சடங்குகளில் உலகதலைவர்கள்

## 'பிரான்ஸ் விதவையாகிவிட்டது'

— பொம்பிடோ

பாரிஸ், நவம்பர் 11

**பிரான்சின் முன்னுள் ஜனதிபதி ஜெனரல் சாள்ஸ் டிகாலின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காக பாரிஸுக்கு உலகத் தலைவர்கள் பலர் விரைந்துள்ளார்கள்.**

நாளை பாரிஸிலுள்ள கிறிஸ்தவத் தேவாலயத்தில் ஜெனரல் டிகாலின் இறுதிச் சடங்குகள் நடைபெறும், அமைதியான கிராமத்தில் தனது நல்லடக்கம் நடைபெறவேண்டுமென அவர் விரும்பினுர்.

அமெரிக்க ஜனுதிபதி திரு. றிச்சாட் நிக்ஸன், சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின், இங்கிலாந்தின் முடிக்குரிய மகாராணி எலிசபெத் சார்பில் இளவரசர் சார்ள்ஸ், மேற்கு ஜெர்மனி அதிபர், பிரிட்டிஷ் பிரதமர் ஹீத் ஆகிய உலகத் தலைவர்கள் மறைந்த பிரான்ஸ் முன்னுள் தலைவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளப் புறப்பட்டுள்ளார்கள்,

உலகத் தலைவர்கள் பலரும் இவரது மறைவு குறித்து தமது ஆழ்ந்த அனுதாபத்தையும் துக்கத்தையும் தெரிவித்துள்ளார்கள்.

யூகோஸ்லாவாக்கிய அதிபர் டிட்டோ, டிகாலின் மறைவு குறித்து பெரும் கவலை தெரிவித்துள்ளார்.

### பொம்பிடோ ஆழ்ந்த வருத்தம்

'டிகாலின் மறைவினுல் பிரான்ஸ் விதவையாகிவிட்டது. அவரின் இழப்பு பிரான்சுக்குப் பேரிழப்பு' என்று பிரான்ஸ் அதிபர் பொம்பிடோ கவலை தெரிவித்துள்ளார்.

'அரசியல் மேதை; தலைசிறந்த அரசியல் ஞானி; எண்ணிலும் எழுத்திலும் அவர் சிந்தனைகள், லட்சியங்கள் போற்றுதற்குரியன' என்று இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி அவரின் மறைவு குறித்து புகழ் ... தமது சார்பிலும் இந்திய மக்கள் சார்பிலும் அனுப்பி வைத்துள்ளார்.

பல நாட்டுத் தலைவர்கள் டிகால் மறைவு குறித்து தமது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

### ஜெனரல் டிகால்

தனக்கென ஓர் அரசியல் வரலாற்றைக்கொண்ட புகழ்மிக்க தலைவர் டிகால்.

பிரஞ்சு அரசாங்கம் இரண்டாவது மகா யுத்தத்தின் போது ஹிட்லரிடம் தோல்வியடைந்தபோது, பிரெஞ்சு எதிர்ப்பு இயக்கத்தை முன்னின்று நடாத்தியவர் டிகால். பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் ஒன்றுபட்டு ஹிட்லரை எதிர்த்துப் போராடி கடைசியில் டிகால் வெற்றிபெற்ருர்.

இரண்டாம் மகாயுத்தத்தின் பின்னர் பிரான்ஸ் சீரழிந்து கிடந்தது. இதனைச் சொற்ப காலத்தில் சீராக்கிய பெருமைக்குரியவரும் ஜெனரல் டிகாலே.

நேற்று முன் தினமிரவு தனது இல்லத்தில் சீட்டாடிக்கொண்டிருந்த போது திடீரென ஏற்பட்ட மாரடைப்பினுல் இவர் காலமானது தெரிந்ததே. இவருக்கு வயது 79.

## பீகிங்கில் பாக். அதிபர்

பீகிங், நவ. 11

பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகானுக்கு பீகிங்கில் உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது. சீனப் பிரதமர் ஸூ என். லாய் பாக். அதிபரை வரவேற்ருர். யாஹ்யாகான் உதி...

---

சாம்பியாவில்

## அரசகட்டுப்பாட்டில் வெளிநாட்டு நிறுவனங்கள்

லுசாக்கா, நவ. 11

சாம்பியாவிலுள்ள வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் அரசாங்க கட்டுப்பாட்டுக்குக் கீழ் கொண்டுவரப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. நாடு பொருளாதார சுதந்திரம் பெற்று, தன்னிறைவு பெற இப்படியான நடவடிக்கை எடுக்கப்படவேண்டியது அவசியமாகிறதென்று சாம்பியா அதிபர் கவுண்டா கூறினுர்.

## லண்டனில் ஈழத்து திரைப்பட விழா

லண்டன், நவ. 11

ஈழத்தின் பிரபல சினிமாப்பட இயக்குனரான லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸின் திரைப்படவிழா லண்டனில் பெருந்திரளான ஆங்கில சினிமா ரசிகர்களைக் கவர்ந்துள்ளது. பிரிட்டிஷ் தேசிய சினிமா மன்றத்தின் நிகழ்ச்சி அதிபரான திரு கென் விலசின் இதுபற்றி குறிப்பீடுகையில் இப்படங்கள் லெஸ்டர் பீரிஸை பிரிட்டிஷ் மக்களிடையே வெகுவாப் பிரபல்யப் படுத்தியுள்ளது என்ருர்.

பிரிட்டிஷ் தேசிய சினிமா மன்றம் இத் திரைப்பட விழாவை ஒழுங்கு செய்தது இதுவரை 'ரேகாவ', 'ஹம்...

## 'யாழ். மாநகரசபை நிர்வாகம் இயன்றளவு தமிழில் நடத்துக'

### மேயர் சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், வியா.

யாழ். மாநகரசபையின் பொது நிர்வாகத்தை இயன்றளவு தமிழில் நடத்துவது விரும்பத்தக்கது என்று நகர மேயர் திரு. ரி. எஸ். துரைராசா மாநகரசபை சகல பிரிவுகளுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபம் ஒன்றில் கேட்டுள்ளார்.

கடந்தமாதம் 23ம் திகதி சபையின் தீர்மானப்படி நிர்வாகத்தை தமிழில் நடாத்த வேண்டும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், அதை அமுல் நடத்துவதில் ஒத்துழைப்புத்தரும் படியும் மேயர் கேட்டுள்ளார்.

திரு. கே. எஸ். நடராசாவினுல் பிரேரிக்கப்பட்டு 23ம் திகதி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'இந்நாட்டின் பாஷை சிங்களமும், தமிழும் ஒன்ருகிவிட்டமையாலும், தமிழில் எழுதும் கடிதங்கட்கும், தமிழிலேயே பதில் கொடுக்கப்படும் என அரசாங்கம் அறிவித்திருக்கின்றமையாலும், தமிழும், ஆங்கிலமும் இருப்பதால் அனுவசியமான காகிதாதிகள் செலவும், ஊழியர் தேவையும் இருப்பதால் எங்கள் மன்ற அலுவல்கள் அனைத்தையும் தமிழிலேயே செயற்படுத்தி மொழிக் கொள்கையையும் ஸ்திரப்படுத்தவேண்டுமென இம்மன்றம் தீர்மானிக்கிறது.

## இரண்டு மாதங்களில் குறைகள் நீங்குமாம்

கிளிநொச்சி, புதன்

"மானிட வாழ்வை வளம்படுத்துவது கலை. கலை, கதம்ப விழாக்களை நாம் நடாத்துவதன் மூலம் எமது பாரம்பரியம், கலாச்சாரம் ஆகியனவற்றை மேம்பாடு அடையச் செய்யமுடியும்" என கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நேற்று மாலை நடைபெற்ற இப்பகுதி பாடசாலைகளின் கதம்பவிழாவுக்குத் தலைமைவகித்து உரையாற்றிய கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி கூறினுர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் "பல்வேறு வகைப்பட்ட பிரச்னைகளின் மத்தியில் கடமையாற்றும் இப் பகுதி ஆசிரியர்கள் இம்மாதிரிச் சிறந்த முயற்சிகளை எடுத்து வருவது பாராட்டுக்...

கதம்பவிழாவில் இப்பகுதிப் பாடசாலை பாடசாலை மாணவர்களின், கிராமிய நடனங்கள், கிராமியப் பாடல்கள், அபிநயப்பாடல்கள். நாட்டுப்பாடல்கள், நாடகங்கள் ஆகியனவும் இடம்பெற்றன.

தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு வித்தியாதிபதி பரிசுகளை வழங்கினுர். மகாவித்தியாலய அதிபர் பொன் கணேசன் நன்றியுரை கூறினுர்.

## 49 மந்திரிகள்

லக்னோ, நவ 11

உத்தரப் பிரதேசத்தில் 49 பேர் புதிய மந்திரிகளாக இன்று காலை பதவி ஏற்றனர். ... மந்திரிகள். கபினற் மந்திரிகள். துணைமந்திரி...

## பெரும்பாலான முஸ்லிம்கள் . . . .

(2ம் பக்கத்தொடர்ச்சி)

ரத்தைக் கொடுத்ததாக நீர் சாட்சியமளித்தீர்?- ஞாபகமில்லை.

### பனுகொடையில் இருந்தார்

வழ: அவர் குற்றவாளியாகக் காணப்பட்டது தெரியுமா? ஞாபகமில்லை.

வழ: நீர் மன்னுரில் தமிழரசு சார்பில் போட்டியிட்டீர்?- ஆம்.

வழ: தேர்தலில் அக்கறையாக இருந்தீர்?- ஆம்.

வழ: எல்லா இனத்தவர்களும் ஆதரவளித்தனர்?- பெரும்பாலான முஸ்லிம்கள் எனக்கெதிராக இருந்தனர்.

வழ: வைத்திலிங்கம் உம்மை ஆதரித்தார்?- ஆம்.

வழ: கூட்டங்களில் பேசினுர்?-ஆம்.

வழ: அவர் நல்ல பேச்சாளர்?- நல்ல பேச்சாளரல்ல.

வழ: செல்வாக்குடையவர்?-இல்லை. கூட்டங்களில் வந்து பேசுவார்.

வழ: அவர் வாக்குகளை திருப்புவார் என நினைத்தீரா?-நான் நினைக்கவில்லை.

வழ: வைத்திலிங்கம் பிரபலமான மனிதர்?- அவர் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர். பனுகொடை தடுப்புக் காவலில் இருந்தார். முதன்முதல் அவரை தடுப்புக்காவலில் தெரியும்.

வழ: பேச்சாளராக மட்டுமின்றி வேறு விதத்திலும் அவர் உதவினுரா?- இல்லை.

வழ: எங்கு வசிப்பவர்?- நாகதாழ்வில் தோட்டம் இருக்கிறது. அடிக்கடி மன்னுர் வந்து போவார்.

வழ: உப்பு குளத்திற்கு பிரசாரத்திற்குப் போனீரா?- இல்லை.

வழ: உப்புகுளம் முஸ்லிம் உமக்கு வேலை செய்தனரா?- இல்லை.

### வாபஸ் பெற்ருர்

வழ: மன்னுரில் தேர்தல் நிலைமை எப்படியிருந்தது?- ஜோன்மார்க் கடைசி நேரத்தில் நியமனத்தை வாபஸ் பெற்றுக்கொண்டார்.

வழ: எப்போ வாபஸ் பெற்ருர்?- நியமனத் தினத்தன்று. பின் எனக்கு வேலை செய்தார்.

வழ: உம்மிடம் கார் இருக்கிது?-ஆம்.

வழ: தேர்தல் காலத்தில் காரில் சென்றீர்? ஆம்.

வழ: நீர் காரில் சென்று பிரசாரம் செய்யவில்லையா? எனது மனைவியும் பிள்ளைகளும் சென்ருர்கள். நான் 15 வருடமாக எம். பியாக...

கள்.

வழ: அவர்களுடன் தேர்தல் நிலைமைபற்றி பேசுவீர்? ஆம். எல்லோரும் எனது ஆதரவாளர்களல்ல. சிலர் வழக்கு சம்பந்தமாக வருவார்கள், சிலர் எம். பி என்ற காரணத்தினுல் உதவிபெற வருவார்கள்.

நீதி: நியமன தினத்திற்குப்பின் திட்டங்கள் போடப்படுவதா? அதற்குமுன்னர் போடப்படும்,

வழ நீர் பல தேர்தல்களில் போட்டியிட்டிருக்கிறீர்? ஆம்

### தேர்தல் காரியாலயம்

வழ: ஒரு மத்திய தேர்தல் காரியாலயம் உண்டு? என் வீட்டில் இருந்தது.

வழ: தேர்தலில் அக்கறையுள்ளவர்கள் உமது வீட்டிற்கு வருவார்கள்? ஆம்.

வழ: வைத்திலிங்கம் வந்திருக்கிருரா? நியமனத்தின் பின் சென்று விட்டார்.

வழ: வைத்திலிங்கம் உமக்காக வேலை செய்தார்? நான் வேலைசெய்யும்படி சொல்லவில்லை. அவர் தன் விருப்பப்படி செய்திருப்பார்.

வழ: நீர் வேலை செய்யும்படி கூறவில்லை? இல்லை.

வழ: யாருக்கும் சொல்லவில்லை? இல்லை.

வழ: மன்னுர் தொகுதி சனத்தொகை என்ன? சுமார் 24,000.

வழ: வழக்கமாக நியமனப்பத்திரத்தில் பிரபலமானவர்கள் கையெழுத்திடுவர்? 3 முஸ்லிம்களும், 3 தமிழரும் கையெழுத்திட்டனர் இந்து என்பதால் வைத்திலிங்கம் கையெழுத்திட்டார்.

வழ: அரசியல் கருத்துக் கொண்டு அவர்களைத் தெரிவு செய்வீர்? இல்லை.

வழ: இந்து கையெழுத்திடவேண்டுமென விரும்பினீர்? ஆம்.

வழ: அந்தச்சமூகத்தில் பிரபல மானவரை நீர் தெரிவு செய்தீர்? அவர் மன்னுரில் இருக்கிறபடியால் தெரிவுசெய்தேன்.

### சாதாரணமெம்பர்

வழ: அவர் தமிழரசுக்கட்சியின் முன்னணியிலுள்ளவர்? சாதாரண மெம்பர். பனுகொடை தடுப்புக்காவலில் இருந்தவர்.

வழ: நான் நினைத்தேன் தலைவர்கள்தான் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர் என்று? பலர் வைக்கப்பட்டனர்.

வழ: வைத்திலிங்கம் எப்படிப் பிரபலமானுர்? சத்...

வழ: உமக்கு சில முஸ்லிம் ஆதரவாளர்கள் உண்டு? மிகவும் சிலர்.

வழ: கப்பாபிச்சை, அசிஸ் வேறு? காசிம்.

வழ: யார் நியமனப் பத்திரம் கையெழுத்திட்டது? கப்பா பிச்சை

வழ. அசிஸ்? வைத்திலிங்கம். அசிஸ் ஒருசோடி நியமனப்பத்திரத்தில் கையெழுத்திட்டனர்.

வழ: நியமனப்பத்திரம் கையெழுத்திட்டவரை தெரியும்? ஆம்.

வழ: 65ல் உமக்கு ஆதரவளித்தாரா? ரஹிமை ஆதரித்தார்.

### ரஹிமின் சொந்தக்காரர்

வழ: அசிஸ் மனுதாரின் சொந்தக்காரர்? ஆம்.

வழ: அவர் உமக்கு வேலை செய்தார்? நியமனத்தன்று வந்து பத்திரத்தில் கையெழுத்திட்டார்.

வழ: நியமனதினத்தன்று கச்சேரிக்கு ஆதரவாளர்கள் செல்வதுண்டு? ஆம்.

வழ: மனுதாரும் வந்திருந்தார்? ஆம்.

வழ: நியமனப் பத்திரங்களில் கையெழுத்திட 3 முஸ்லிம்களும் வந்திருந்தனர்? ஆம்.

வழ: வைத்திலிங்கமும் வந்திருந்தார்?- ஆம்.

வழ: அசிஸ் இருப்பது எங்கே?- மூர் ரோட்.

வழ: நியமனத்திற்கு பின் அசிசை சந்தித்தீரா?- வீட்டிற்கு வந்து தேர்தல்பற்றி விசாரித்தார்.

வழ: தேர்தல் நிலைமை பற்றி சொல்லவில்லையா?- இல்லை.

வழ: அவர் ஒரு உண்மையான ஆதரவாளர்?- ஆம்.

வழ: நீர் தேர்தலில் வெற்றி பெறுவதையிட்டு அவர் அக்கறையாக இருந்தார்?- ஆம்.

வழ: மன்னுர் பட்டினத்தில் முஸ்லிம்களில் உமக்காக ஒருவரும் வேலை செய்யவில்லை?- ஒருவருமில்லை எல்லாரும் பயந்திருந்தனர்.

வழ: அசிஸ் உம்முடன் ஒன்று அல்லது இரண்டு நிமிடங்கள் கதைத்திருப்பார்?- ஆம்.

வழ: அசிஸ் சகோதரர் சலிம் வாக்களிப்பு ஏஜண்டாக இருந்தார்?- ஆம்.

வழ: அவர் எப்படி ஏஜண்டாக வந்தார்?- அவர் ஒரு கட்சி ஆதரவாளர்.

வழ: நியமனப் பத்திரத்தில் அவர் கையெழுத்திடவில்லை?- நான் கேட்கவில்லை.

வழ: அசிஸ் உமது சாட்சி? ஆம். அவர் வந்து என்ன அறி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...ந்த அரசியல் ஞானி; எண்ணிலும் எழுத்திலும் அவர் சிந்தனைகள், லட்சியங்கள் போற்றுதற்குரியன' என்று இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி அவரின் மறைவு குறித்து புகழ் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இந்திய ஜனாதிபதி கிரியும் தமது ஆழ்ந்த துக்கத்தைத்...

...பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் யாஹ்யாகானுக்கு பீகிங்கில் உற்சாகமான வரவேற்பளிக்கப்பட்டது. சீனப் பிரதமர் ஸூ என். லாய் பாக், அதிபரை வரவேற்றார். யாஹ்யாகான் உத்தியோகபூர்வமான விஜயத்தை சீனாவில் மேற்கொண்டுள்ளார்.

...மக்களிடையே வெகுவாகப் பிரபல்யப் படுத்தியுள்ளது என்றார்.

பிரிட்டிஷ் தேசிய சினிமா மன்றம் இத் திரைப்பட விழாவை ஒழுங்கு செய்தது. இதுவரை 'ரேகாவ', 'ஹம் பெரலியா', 'ரன்சலு', 'டெலோவக் அத்தற' ஆகிய லெஸ்டரின் படங்கள் காண்பிக்கப்பட்டன. நாளை லெஸ்டரின் 'கொலு ஹடவத்த' என்ற படத்துடன் இத் திரைப்பட விழா முடிவடைகிறது.

...தொடர்ந்து பேசுகையில் ''பல்வேறு வகைப்பட்ட பிரச்னைகளின் மத்தியில் கடமையாற்றும் இப்பகுதி ஆசிரியர்கள் இம்மாதிரிச் சிறந்த முயற்சிகளை எடுத்து வருவது பாராட்டுக்குரியது. எமது வருங்காலச் சந்ததியினரின் கல்வி வளர்ச்சி, ஆசிரியர்களதும் பெற்றோரதும் அயராத உழைப்பிலேயே தங்கியுள்ளது. இப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் உள்ள குறைபாடுகளை நீக்கி, விஞ்ஞான போதனைகளையும் நடாத்த முயற்சித்துவருகிறேன். இரண்டு மாதத்தினுள் சகல கஷ்டங்களும் நீங்க ஆவனசெய்வேன்.

சில ஆசிரியர்களை இடம் மாற்றியதாக என்மேல் குற்றஞ்சாட்டுவதில் எவ்வித உண்மையுமில்லை. இதுவரை எந்தவொரு ஆசிரியரையும் பழிவாங்கும் நோக்கத்துடன் நான் மாற்றவில்லை.''

விழாவுக்குப் பிரதம விருந்தினராக வருகைதந்த வடமாநில வித்தியாதிபதி திரு. வி சங்கரலிங்கம், கிளிநொச்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. நா. துரைசாமி, திரு. ஏ. கே. இராசேந்திரம் ஆகியோரும் உரையாற்றினர்.

லக்னோ, நவ. ...

உத்தரப் பிரதேசத்தில் 49 பேர் புதிய மந்திரிகளாக இன்று காலை பதவி ஏற்றனர். மந்திரிகள், கபினற் மந்திரிகள், துணைமந்திரிகள் ஆகியோர் இதில் அடங்குவர்.

...காரில் சென்றீர்? ஆம்.

வழ: நீர் காரில் சென்று பிரசாரம் செய்யவில்லையா? எனது மனைவியும் பிள்ளைகளும் சென்றார்கள். நான் 15 வருடமாக எம். பியாக இருக்கின்றேன் ஆதலால் மக்களுக்கு என்னைத் தெரியும். நான் ஆதரவு திரட்டவே இல்லை.

56ம் ஆண்டு தேர்தலில் நான் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்றேன். பின் 60ம் ஆண்டு தேர்தலிலும் சென்றேன். அவர்களுக்கு என்னைத் தெரியும் எனவே வீடுகளுக்குப் போகவேண்டிய அவசியமில்லையென நினைத்தேன்.

வழ: ஒவ்வொருவரையும் தனித்தனி சந்திக்கவில்லையா? என்ருல் வரமுடியாதென்றும் உதவி செய்யும்படியும் வாக்களிக்கும்படியும் கூட்டங்களில் கூறினேன். தினமும் என்வீட்டிற்கு 150பேர்வரைவருவார்

தலைவர்கள்தான் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர் என்று? பலர் வைக்கப்பட்டனர்.

வழ: வைத்திலிங்கம் எப்படிப் பிரபலமானார்? சத்தியாக்கிரகம்] இருந்தபின் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டபோது.

கட்சி ஆதரவாளர்.

வழ: நியமனப் பத்திரத்தில் அவர் கையெழுத்திடவில்லை? - நான் கேட்கவில்லை.

வழ: அசெஸ் உமது சாட்சி? ஆம். அவர் வந்து என்ன அநியாயம் செய்து போட்டாங்கள் என்றார்.

இக் கட்டத்தில் விசாரணை ஒத்தி போடப்பட்டது.

## 'நாட்டுக்கு நாடு உதவிபுரிய யூ. என். ஒ. உதவுகின்றது'

யாழ்ப்பாணம், வியாழன்

''நாட்டுக்கு நாடு பரஸ்பர உதவியைச் செய்வதில் யூ. என். ஒ. மிகுந்த அக்கறை காட்டி வருகின்றது. உதாரணமாக இலங்கைக்கு 90 தொழில் நுட்ப வல்லுநர்களை யூ. என் ஒ. மூலம் உதவியுள்ளது தொழில் நுட்ப அறிவு வளம் பெற வேண்டிய இந்த நாட்டுக்கு தொழில் நுட்ப வல்லுநர்களில் நல்ல அபிவிருத்தி கிடைக்கும்''

யாழ் மாநகர மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு வடமாகாண அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா தலைமை வகித்தார் கூட்ட ஆரம்பத்தில் யூ என் ஒ கொடியும், இலங்கையின் தேசியக் கொடிகளையும் யூ என் ஒப் பிரதிநிதியும், அரசாங்க அதிபரும் முறையே 'பாண்டு' வாத்திய இசையுடன் ஏற்றிவைத்தார்கள்

வடபிராந்திய கல்வியதிபர் திரு வி சங்கரலிங்கம், மாநகரசபை உதவி ஆணையாளர் திரு சுந்தரம் முதலியோரும் பேசினார்கள் பல கல்லூரி மாணவ மாணவிகளும் கருத்தரங்குப்போட்டியில் பங்கு பற்றினார்கள் சிறப்பாகச் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் மாணவர்கள் பேசினார்கள் காரியதரிசி திரு பிள்ளைநாயகம் நன்றி கூறினார்

(கு வி ம)

## தமிழ் ஆராய்ச்சிக்கு மேலும் 15,000 டாலர்

சென்னை, நவ. 11

தமிழ்நாட்டில் நிறுவப் பட விருக்கும் தமிழ் ஆராய்ச்சிக்கழகத்திற்கு 1971-72ம் ஆண்டுக்கு மேலும் 15 ஆயிரம் டாலரை கொடுப்பதற்கு ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனம் முடிவு செய்துள்ளது. இத் தகவலை இந்தியக் கல்வி அமைச்சர் திரு. வி கே. ஆர், வி. ராவ் தெரிவித்தார்.

இவ்வாராய்ச்சிக்காக யூனெஸ்கோ நிறுவனம் இதற்கு முன் 10 ஆயிரம் டாலரைக் கொடுத்தது.

## சம்பளக்கமிஷன் முன்சாட்சியம்

யாழ்ப்பாணம், வியாழன்

அகில இலங்கை கல்விப் பகுதி கைத்தொழில் ஆசிரியர் சங்கம் சம்பளக்கமிஷனுக்கு அனுப்பிவைத்த மகஜர் சம்பந்தமாக இம்மாதம் 25-ம் திகதி சாட்சியமளிக்கவுள்ளது.

சங்கத்தலைவர் திரு. ஜி. கஜவீர ஆராய்ச்சி தலைமையில் சாட்சியம் அளிக்கப்படும். வடபிரதேசக் கிளைச் சங்கத்தின் பிரதிநிதியாக திரு. சே. சோமசுந்தரம் கலந்துகொள்ளுவார்.

## அரியாலையூர் மேசனூர்

அரியாலையூர் வக்களால் மேசனூர் என்று அழைக்கப்பட்ட திரு. வே. கதிர்காமுவின் நினைவுதினம் நேற்று அரியாலை மேற்கு ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் கொண்டாடப்பட்டது. இந்த நிலையத்தின் ஸ்தாபகரும் இவரே.



எம்சமூகத்தின் விடிவெள்ளியாக பெரியார் திரு. வே. கதிர்காமு 1894-ம் ஆண்டு பங்குனித்திங்கள் 9-ம்நாள் எம் சமூகத்தின் அங்கமாகத் தோன்றினார்.

அன்னாரின் பெற்றோர் வேலுப்பிள்ளையும் வள்ளிப்பிள்ளையும் சைவ மரபிற்தோன்றியோராவர் நற்றவப் பயனாய் நல்லதோர் ஆண்குழந்தையைப் பெற்றுப்புகழடைந்தனர், தாய், பால்நினைந்தூட்டும் போதே சேவை செய்யும் பண்பையும், கொள்கைப் படிப்பையும், நினைத்ததை முடிக்கும் ஆற்றலையும் சேர்த்தூட்டியிருக்க குழந்தைப்பருவம் கடந்து பள்ளிப்பருவம் அடைந்த கதிர்காமு குடும்ப சூழ்நிலைக்கேற்ப ஆரம்பக் கல்வியை மட்டும்கற்றார் பின்னர் பெற்றோர்க்குதவியாக தொழிலில் ஆரம்ப தொழிலாளியாக ஈடுபட்டார் கீழ்ப்படிவு, நேர்மை, சுறுசுறுப்பு ஆகியன கூலியாளாக இருந்தவரை மேசன் ஆக்கியது.

திரு. கதிர்காமு என்ற பெயருக்குமேலாக 'மேசனூர்' என்ற பெயர் மக்கள் மத்தியில் பெருஞ்செல்வாக்கைப் பெற்றது. ஊரில் கட்டிடத் தொழிலில் ஈடுபட்டோர்பலர் இருந்தபோதும் 'மேசனூர்' என்ற சொல் மறைந்த எமது பெருந்தகையையே குறித்தது கட்டடக்கலை நுணுக்கங்களை அவர் அனுபவம்மூலம் கற்றுக் கொண்டாரேயல்லாமல் பல்கலைக்கழகத்திலோ தொழில் நுட்பக்கல்லூரியிலோபெற்றாரில்லை பகிரங்கவேலைப்பகுதியினரின் கைவினைத்திறம் பெற்ற கட்டிடப்பகுதி நிபுணராக மதிக்கப்பட்டு பல நெடுஞ்சாலைகளின் பாலங்கள், மதகுகள் இவரிடம் பொறுப்பாகவிடப்பட்டன. இன்றும் அவரின் கைவண்ணம் பளிச்சிடுவதைக் காணலாம். போக்குவரத்து ஆரம்பித்த காலத்தில் நெடுஞ்சாலைகளின் அங்கங்களை அமைப்பதற்கு அவர் நெடுந்தொலைவுகளுக்குக் கால்நடையாகவே சென்று வருவார். அப்பாதயாத்திரை அவரின் உடலுக்கு மேலதிகமான உறுதியை அளித்தது. உழைப்பின் மகிமையை உணர்ந்த பெரியார் சிக்கனத்தின் தத்துவத்தையும் கற்றுக் கொண்டார்.

உயர்ந்த வாழ்க்கை நெறிப் போராட்டத்திற்கு உத்தம இல்லத் தலைவியே நிலைக்களமாக வேண்டும். அதற்கொப்ப வள்ளிக்குட்டி அம்மையாரை வாழ்க்கைத் துணைவியாராக ஏற்றுக் கொண்டு இல்வாழ்க்கைப் பயணத்தையும் தொடர்ந்தார். இல்லத் தலைவியின் மாட்சிமைதான் அன்னாரின் சமூகசேவைக்கு அணிகலனாக இருந்தது. இல்லறப் பேற்றின் பயனாக இத்தம்பதிகளுக்குக் கிடைத்த ஒரே மகனையும் இழந்த போதிலும் பெற்றோர் நிலைகுலைந்து இருந்துவிடவில்லை. சமூகப் பிள்ளைகள் எல்லோரையும் தம்பிள்ளைகளாக உருவகப் படுத்தினர். எல்லோருடனும் இரண்டறக் கலந்து ஒவ்வொருவரது உள்ளத்திலும் இடம்பெற்றனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ஏழைகள் தொண்டன் ஐத்துறூஸ்



யாழ் பெரும்பகுதியில் வாழும் முஸ்லிம் மக்கள் எமது மத்தியில் வாழ்ந்து மறைந்த கொடைவள்ளல் ஜனாப் யூ. எம். ஐத்துறூஸின் 3-வது சிரார்த்த தினமான இன்று நினைவு கூருதல் கடனாகும், நாம் அன்னாருக்குநிறை கடமை உணர்வோடு அஞ்சலிசெலுத்துவோமாக.

அன்பும்- இரக்கமும்- நன்றியுணர்வுமுள்ளவரான மர்ஹூம் யூ. எம். ஐத்துறூஸ் தன்னலமற்ற பேருதவிகளை நம் சமூகத்துக்கு மட்டுமன்றி பிறசமூகத்துக்கும் ஆற்றியிருக்கின்றார். இதனால்தான் பாகிஸ்தான் ஹைகமிஷனர் மேன்மை தங்கிய நவாப் சித்தீக் அலிகான் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபொழுது ஒரு வைபவத்தில் கூறுகையில், 'ஜனாப் ஐதுறூஸ் ஒரு ஏழைகள் தொண்டன்; யாழ். முஸ்லிம் மக்கள் மத்தியில் அவர்வாழ்கின்றதே பெரும் பெருமை' என வாயார வாழ்த்தியதை யாரும் மறக்கலாகாது.

1964-ம் ஆண்டு மே மாதம் 10-ம் திகதி அன்னாருக்கு யாழ் முஸ்லிம்களால் ஒரு பொதுப் பாராட்டு வைபவம் நடைபெற்றது. அச்சமயத்தில்தான் மர்ஹூம் அல்ஹாஜ் வி எம் எம் எஸ் அப்துல்காதர் அன்னாருக்கு 'கொடைவள்ளல் என்ற நாமத்தைச் சூட்டினார். நம் பகுதியில் ஓர் உயர்தரக்கல்லூரிவேண்டுமென்று எண்ணிய மர்ஹூம் ஐத்துறூஸ் யாழ். முஸ்லிம் பகுதிக்கே உயர் வளிப்பதாக விளங்கும். உஸ்மானியாக் கல்லூரியை உருவாக்க உறுதுணையாக இருந்தார். மண்கும்பான் பள்ளிவாசலின் சீர்கேடான நிலையைக் கண்ணுற்று அன்னார் பல்லாயிரக்கணக்கான பணத்தைச் செலவுசெய்து சீர்கேட்டை அகற்றியவர் அன்னார் என்பதை யாரும் மறக்கமுடியாது. ஏழை மக்களுக்கு அவர் மிக உதவியாயிருந்தார். முகம் கோணாமல் உதவிசெய்தார். குறிப்பாக யாழ் வாழ் முஸ்லிம்கள் மத்தியில் இவர் செய்த சேவை அறக்கொடைகள் அளப்பரியன

மர்ஹூம் யூ எம் ஐத்துறூஸின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுவோம்'

—ஷாஹுல் முகம்மது இப்றாகிம்

# 'ஏகாதிபத்தியம், நிலப்பிரபுத்துவம் அழிந்தொழிந்த நாள்'

## அக்டோபர் புரட்சி விழாவில் டாக்டர் உரை

யாழ்ப்பாணம், வியா

'இலங்கையின் நேச நாடான சோவியத் ரஷ்யாவில் 1917-ம் ஆண்டு அக்டோபர் மாதம் கிரிகோரியன் கலண்டரின்படி நவம்பர் 7-ம் திகதி மகத்தான சோஷலிசப் புரட்சி வெற்றிகரமாக நடைபெற்று ஓப்பேறியது. அன்றுதான் சமூகத்தின் அடிப்படை வர்க்கமான உழைத்துவாழும் தொழிலாளவர்க்கத்தின் அரசு ரஷ்யாவில் முதன்முதலாக நிறுவப்பட்டது. சிந்தனையாளரும் உலகின் முதலாவது சோஷலிச ராஜ்யத்தின் நிர்மாணியுமான மேதை லெனின் தலைமையில் மார்க்ஸிஸக் கொள்கை அடிப்படையில் வெடித்தெழுந்த சோஷலிசப் புரட்சி, ஏகாதிபத்தியத்தினதும், நிலப்பிரபுத்துவத்தினதும் ஆதிக்கத்தை மூலவேருடன் தகர்த்தெறிந்தது'.

என்றிவ்வாறு யாழ். நகரில் இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கம் கொண்டாடிய சோவியத் அக்டோபர் புரட்சிதின விழாவில் உரையாற்றிய சங்கத்தின் செயலாளரான டாக்டர் சுந்தரலிங்கம் கூறினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

'இன்று உலகின் மூன்றில் ஒரு பகுதி மக்கள் சோஷலிச ஆட்சியின்கீழ் வாழ்கின்றனர். இந்த மக்கள் பல்வேறுவித சுரண்டல்களினின்றும் விடுதலைபெற்றுள்ளனர்

சோஷலிசப் பொருளாதார அமைப்பின்கீழ் உற்பத்திச் சாதனங்கள், உற்பத்திக்கு வேண்டிய கருவிகள், இயந்திரங்கள், உற்பத்திக்கு வேண்டிய மூலப்பொருட்கள் இவையெல்லாம் மக்களினுடையதும் மக்களால் உருவாக்கப்பெற்ற சோஷலிச அரசாங்கத்தினுடையதுமே. மேலும் சோஷலிச நாடுகளிலுள்ள நீர்வளம், நிலவளம், பொருள்வளம் இவையெல்லாம் மக்களுடையதும், மக்களின் சோஷலிச அரசாங்கத்தினதுடைமையுமேஒழிய ஒரு சில தனிப்பட்ட மனிதருக்குச் சொந்தமானது அல்ல,

சோஷலிச நாடுகளில் மக்கள் எல்லோருடைய நலன் முன்னேற்றம், சமூக பொருளாதார, கல்வி, கலாச்சார வளர்ச்சிக்குத் தகுந்தபடி திட்டமிட்ட கட்டுப்பாடுள்ள சோஷலிசப் பொருளாதார கொள்கைகளைக் கையாளுகிறார்கள். இதனால் தான் சோஷலிச நாடுகளில் ஒவ்வொரு பிரஜையினது வாழ்க்கைக்கு வேண்டிய முக்கிய பிரதான அடிப்படை உரிமைகளாகிய உணவு, உடை, இருக்க இடம், தாய்மொழி மூலம் கல்வி, ஒவ்வொரு மனிதனுக்கும் உழைக்கும் சக்திக்குத் தகுந்த தொழில் இவை யாவும் கட்டாயமாக அரசாங்கம் கொடுத்தேயாக வேண்டும் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கம் போன்ற நட்புறவுச் சங்கங்கள்மூலம் இந்த உண்மைகளை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது.

## சேட்விலையைக் கூட்டிவிற்றனரா?

சாய்ந்தமருது, புதன்

கல்முனை பட்டினத்தில் பிரபல பிடவைக்கடை ஒன்றில் றெடிமேட் சேட் ஒன்றைக் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூட்டிவிற்ற வர்த்தகர் ஒருவரை கல்முனைப் பொலீஸார் அண்மையில் கைது செய்தனர்.

அம்பாறை நகரிலும் பிடவைக்கடை ஒன்றில்சேட்டில் கொள்ளைலாபம் வைத்து விற்ற ஒரு வியாபாரியைப் பொலிஸார் கைதுசெய்தனர்.

## குடிபோதையில் விழுந்தவர் மரணம்

பருத்தித்துறை, புதன்

புத்தூர் மேற்கைச் சேர்ந்த ஆறுமுகம் பொன்னன் (35) என்பவர் நேற்றிரவு குடிபோதை காரணமாகத் தமது வீட்டுக் கிணற்றுக்குள் விழுந்து மரணமானார் இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவர் மரணவிசாரணையதிகாரி திரு. கே. கனகரத்தினம் விபத்தினாலேற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார் யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு இவர் மரணமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுள் எங்கும் நிறைந்தவராதலால் அவர் அடிக்கடி மண்ணில் மனித உருவில் அவதாரம் செய்கிறுர். அவர் ஒவ்வொரு மனிதர் உள்ளத்திலும் வாழ்கிறுர். எனவே, எல்லோரையுமே கடவுளின் அவதாரங்கள் என்று கூறலாம். —மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna;
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 26-ந் திகதி (12-11-70)


## கடின உழைப்பு

கடின உழைப்பும் ஒழுங்குக் கட்டுப்பாடும் சோஷலிஸத்துக்கு மிக அத்தியாவசியமானவை என்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயகா வெள்ளவத்தை ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தொழிலாளர் சபை உறுப்பினர்கள் மத்தியில் எடுத்துக் காட்டியிருப்பது இ. போ. சபை ஊழியர்கள் மட்டுமல்ல அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களுக்கும் பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் கூட சிந்தித்துச் செயலாற்ற உதவவேண்டும்.

சோஷலிஸம், ஜனநாயக சோஷலிஸம் என்று ஒவ்வொருவரும் 'சோஷலிஸம்' பற்றிப் பேசுவது இன்று ஒரு நாகரிகமாகவே வளர்ந்துள்ளது. சோஷலிஸ அரசாங்கம் என்றுல் குறைந்த வேலைசெய்து கூடிய ஊதியம் பெறலாமென்பது சிலருடைய தவருன கருத்து.

''அப்பே ஆண்டுவ'' என்று சொல்லப்படுகின்ற ''எங்கள் அரசாங்கம்'' என்ற மனப்பான்மை ''எங்கள் அரசுதானே! என்ற அலட்சிய மனப்பான்மையைப் பலரின் மனத்திலும் ஏற்படுத்தியதன் விளைவு எங்கும் எதிலும் ஒழுங்கு, கட்டுப்பாடு சீர்குலையவே வழி செய்ததென்பதை 1956-ம் ஆண்டில் மக்கள் ஐக்கியமுன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னரும் இப்போது மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் கூட்டணியின் ஆட்சிக்கு வந்ததிலிருந்து நடைபெற்று வரும் நிகழ்ச்சிகளிலிருந்து பிரதமரும் நன்கு தெரிந்து கொண்டிருப்பது தான் சோஷலிஸத்துக்கு, ''கடின உழைப்பும் ஒழுங்கு, கட்டுப்பாடும் அவசியம் என்பதைச் சரியாக எடுத்துக் காட்டக்கூடியதாயிருந்ததென்று கருதுவதில் தவறிருக்கமுடியாது.

தொழிற்சங்கம் என்றுலே கிளர்ச்சியும் வேலை நிறுத்தமும் தான் அதன் வேலை என்ற அபிப்பிராயம் நமது நாட்டில் நிலவி வந்திருக்கிறது. இந்தக் கருத்தில் ஓரளவாவது நியாயமிருக்கிறதென்பதற்கு பிரதமர் கடின உழைப்பையும் ஒழுங்குபற்றியும் வலியுறுத்தியிருப்பது சான்று. ஊழியர்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கும் உரிமைகளைக் கோருவதற்கும்தான் தொழிற்சங்கம் இருக்கிறதென்ற அபிப்பிராயம் தொழிலாளர் மனதில் வளர்த்துவிடப்பட்டிருக்கிறது கடமையைச் செய்தால் உரிமைகள் கிடைக்குமென்பதையோ, கடமையைச் சரியாகச் செய்ய வேண்டியதன் அவசியத்தையோ அவர்கள் மனதில் பதியவைப்பதற்குத் தொழிற்சங்கத் தலைவர்களும் தவறிவிட்டார்களென்றே சொல்ல வேண்டும். அரசியல் ஆதாயத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கட்சிகளின் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு தொழிலுக்குப் பல தொழிற்சங்கங்களிருக்கலாம் என்ற நிலையிலிருக்கும் வரை கடமையைப் பற்றி வலியுறுத்தும் தொழிற்சங்கங்களை எதிர்பார்ப்பது கஷ்டம்தான்

என்றுலும் இ. போ சபை போன்ற தொழிலாளர் சபைகள், தொழிலாளரின் உரிமைகளுடன் அவர்களின் கடமைகளையும் வலியுறுத்தி நாட்டில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவவும் கடினமாக உழைக்கவும் வழி காட்டவேண்டும். இதனுல் அவர்களுக்கும் நாட்டுக்கும் நன்மை கிடைக்கும்.

## மாவீரர் ...டி கோல்

ஆட்சி மன்றத்திலே . . .

நமது நிருபர் பெரி சுந்தரலிங்கம்

# யுன்.என்.பி.யின் 5 ஆண்டுகள் பற்றி திருமதி விவியனின் 'விளாசல்'

''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும், பாரினில் நிகர்த்தவந்தோம்; எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண்'' என்று புதுமைப் பெண்ணை மனதிலிருத்திப் பாடினுன், பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட வந்த பைந்தமிழ்க் கவிஞன் பாரதி.

இன்றைய விவாதத்திலே பங்குபற்றி, எதிர்க்கட்சித் தலைவர் ஜே ஆர். ஜயவர்த்தனவையும், அவர் சார்ந்திருக்கும் யூ. என். பி யையும், அதன் கொள்கைகளையும், ஐந்தாண்டுகால ஆட்சியையும். சுமார் அரை மணித்தியாலமாக திருமதி விவியன் குணவர்த்தன விளாசு, விளாசென்று விளாசித் தள்ளியபோது பாரதியின் இந்த வரிகள்தான் எனக்கு நினைவுக்கு வந்தது.

திருமதி விவியன், போக்குவரத்து அமைச்சர், லங்கா சமசமாஜக் கட்சியின் தூண்களில் ஒருவரான திரு. லெஸ்லி குணவர்த்தனவின் மனைவி; 'பொரலுகொடச் சிங்கம்' 'மார்க்ஸிஸத் தந்தை', முன்னைநாள் கைத்தொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனவின் மருமகள் அரசியலிலே ஊறித் திளைத்தவர்; அரசியல் வாழ்வுக்கே தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் என்றுலும் மிகையாகாது. ஆட்சிமன்ற-நகர சபைத் தேர்தல்களிலே பங்குபற்றி வெற்றிகளையும் தோல்விகளையும் பெற்ற அனுபவசாலி. இப்போதுள்ள ஆட்சிமன்றப் பெண் உறுப்பினர்களில் ஆக்ரோஷமாகப் பேச வல்லவர் இவர் ஒருவரே!

''கண் ஆப்பரேஷன் ஒன்றின் பின்னர், டாக்டரின் விசேஷ அனுமதிபெற்று, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் பங்குபெற வந்துள்ளேன்'' என்று ஆரம்பித்தார் விவியன். ''சரி அதற்காக ஐந்து நிமிடங்கள் அதிகமாகத் தருகிறேன்'' என்று காராள

தேசியக்கட்சியையும் 'யங்கி டிக்' ஜே. ஆரையும் தாக்கு தாக்கென்று தாக்கிக் கொண்டே போனுர், சபாநாயகர் இடையிடையே நேரம் ஆகிவிட்டது நேரம் ஆகிவிட்டது என்று சிவப்பு சிக்னல் காட்டினுலும் விவியனை நிற்பாட்ட முடியவில்லை ஜே. ஆர். 'இரட்டை நாக்கால்' பேசக்கூடியவர் என்று வர்ணித்த விவியன்,

## 8-ம் நாள் விவாதம்

ஜே. ஆரும், அவர் மனைவி, தம்பி ஆகியோர் பங்காளராகஇருக்கும் ஏசியன் சாட்டன் மில்ஸ் என்ற நிறுவனத்தையும், வேறு பல தனியார் நிறுவனங்களையும் சுட்டிக்காட்டி பல இலட்சக்கணக்கான லாபம் பெறும்கம்பனிகளின் லாபத்தைக்குறைக்கநிதியமைச்சர் (விவியனின் பாஷையில் ''என். எம் சகோதரயா'') நடவடிக்கை எடுக்கும்போது யூ. என். பி தடைசெய்வதாக''க் குற்றஞ்சாட்டினுர்.

யூ. என். பி. 13 ஆண்டுகளும் ஸ்ரீலங்கா 9 ஆண்டுகளும் ஆட்சி நடத்தியுள்ளமையால் நாட்டின் நிதி நிலைமை சீர்குலைந்திருப்பதற்கு இரு கட்சிகளும்தான் பொறுப்பு ஏற்கவேண்டும் என்று ஜே ஆர் பேசியிருந்தாரல்லவா? அதற்கு விவியனின் பதில் ''1947லிருந்து கணக்கெடுப்பது வீண் மழுப்பல். 1936ம் ஆண்டிலிருந்து ஏகாதிபத்திய வாதிகளுடன் ஒன்றிணைந்து 20 ஆண்டுகள் 1956 வரை ஆட்சிநடத்தியது யூ என் பி. அத்தோடு நாங்கள் 9 ஆண்டுகளில் செய்திருந்த முன்னேற்றங்களை எல்லாம் நீங்கள் ஆட்சி புரிந்த ஐந்தாண்டுகளில் அழித்துவிட்டீர்கள்'' என்பதுதான்.

விவியனின் பேச்சைக் கேட்டுக்கொண்டு இருந்த அமைச்சர் லெஸ்லி நடுவில் எழும்பிச் சென்றபோது ''உமக்கு நேரம் ஆகிவிட்டது என்பதை உணர்ந்துதான் அமைச்சர் எழுந்து செல்கிருர்'' என்று சபாநாய

ஸப் பூச்சாண்டி காட்டுகிருர். நாங்கள் கம்யூனிஸ்ட் நாடுகளுக்கு ரஷ்யாவுக்கு, சீனுவுக்கு, கொரியாவுக்குப் போய் வந்துள்ளோம். அங்கு பச்சிளம் பாலகன் முதல் பல்விழுந்த கிழவன் வரை எல்லாவித சுக போகங்களுடன் இன்பமாக வாழ்க்கை நடத்துவதைப் பார்த்து வந்துள்ளோம். எனவே இந்நாட்டு மக்கள் கம்யூனிஸப் பூச்சாண்டிக்குப் பயப்படப் போவதில்லை' என்று சொல்லிய விவியன் 'உங்களின் நாடான அமெரிக்காவிலே இளைய தலைமுறையினர் கொலைகாரர்களாகவும் கொள்ளைக் கூட்டத்தினராகவும் மாறி வருவதையும் அங்குள்ள மக்கள் படும் அல்லல்களையும் எடுத்துக்கூற ஏன் தயங்குகிறீர் என்று கேட்கத் தவறவில்லை.

''யூ. என், பி, யில் கொலைகாரர்கள் இல்லை என்றும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில்தான் இருந்தார்கள் என்றும் (ஜே ஆர்) பேசியிருக்கிருர்: ஸ்ரீலங்கா கட்சியில் இருந்தவர்கள் கொலைகாரர்களாக மாறியபோது யூ. என். பி.க்கு மாறிவிட்டார்கள். காலஞ்சென்ற புத்தரகித்த கடைசிநாட்களில் புத்தகமொன்றை எழுதிக்கொண்டிருந்தார், வெசாக் தினத்திற்கு முன் தன்னை விடுதலை செய்யாவிடில் அந்தப் புத்தகத்தை வெளியிடப்போவதாகச் சொல்லியிருந்தார். அது வெளிவந்திருந்தால்பல உண்மைகள் வெளிவந்திருந்திருக்கும், இப்பொழுது அந்த நகல் பிரதி யாரிடமிருக்கிறது என்றும் தெரியவில்லை ஒரு இன்ஜெக்ஷனைப் பெற்ற புத்தரகித்த திடீரென ஒருநாள் இறந்துவிட்டார்'' என்று பொரிந்து தள்ளினுர் விவியன்.

### ராஜன் செல்வநாயகம்

இன்று முதன் முறையாக சபையில் பேசிய 'புது...

வர்கள்தாம் என்பதை நிருபிக்க ''சுதந்திரன்'' 22-10-70 இதழிலிருந்து மட்டக்களப்பு முதலாவது எம். பி, ராஜதுரையின் அறிக்கையிலிருந்து ஒருபகுதியை வாசித்துக் காட்டினுர்.

மட்டக்களப்புக்கு வந்த அமைச்சர் குமாரசூரியரைப் புகழ்ந்து பேசிய தமிழரசுக் கட்சி ராஜதுரை, கொழும்புக்குவந்து 'சுதந்திரன்' பத்திரிகையில் பண்டாரநாயகாவின் குடும்பத்தை நம்பித் தமிழினம் வாழமுடியுமா?'' ''என்று கேட்டிருக்கிருர்'' என்று காட்டினுர் செல்வநாயகம்.

மட்டக்களப்புச் செல்வநாயகத்தின் குற்றச் சாட்டுகளைக் காங்கேசன்துறைச் செல்வநாயகமும் கவனமாகக் கேட்டுக் கொண்டுதானிருந்தார்.

'காலஞ்சென்ற பண்டாரநாயகாவின் உருவத்தை வைக்கோலால் செய்து, சவப்பெட்டியில் வைத்து கேவலம் செய்து மைதானத்திலே கொண்டு எரிந்தவர்கள் தமிழரசுக் கட்சியினர் பசுத்தோல் போர்த்திய புலிகள் அவர்கள். அவர்கள் பேசுவதை நம்பி தமிழ் மக்கள் இந்த எங்களுடைய மக்கள் அரசாங்கத்திற்கு விரோதம் என்று எண்ணி விடாதீர்கள்' என்று அரசாங்கத் தரப்பினரைப் பார்த்துக் கேட்டுக் கொண்டார்.

'கிழக்கு மாகாணத்திலே நான்கு தொகுதிகளிலே தமிழரசுக் கட்சித் தலைவர் தொட்டு எல்லாரையும் ப்தாற்கடித்து விட்டார்கள் மக்கள். மட்டக்களப்பில் கூட அடுத்தமுறை தமிழரசுக் கட்சி போட்டிபோட வேண்டிய அவசியமில்லாதபடி அவர்களுக்கிருந்த பெரும்பான்மை இரண்டாயிரத்துக்குக் குறைந்துவிட்டது' என்று கூறிய செல்வநாயகம், ஒத்துழைத்து சமாதான முறையில் பேசித்தான் உரிமைகளைப் பெற முடியும், கட்சி அடிப்படையில் அமைச்சர்களுக்கு கறுத்தக்கொடி காட்டி தடைசெய்து கொண்டிருந்த...

## ஜயராஜன் எழுதுவது

'இந்தியா பாஸ்போட்' எடுத்தவர்கள் எல்லாரும் இனி 'விஸா' வாங்கவேண்டுமென்று மந்திரிசபை முடிவு செய்துவிட்டதாம். அதாவது இங்குள்ள இந்தியப் பிரஜைகள் எல்லாரும் சீக்கிரத்தில் தாய்நாட்டுக்குத் திரும்பிச்செல்லவேண்டியதே.

இது எதிர்பார்க்கப்பட்டதுதான் என்றும், நியாயமும்கூட என்றும் இங்கு பல வருடகாலமாக வசித்துவரும் ஓர் இந்திய பாஸ்போட் அன்பர் தெரிவித்தார். பல வருடகாலம் இங்கு ஏதோ தொழில் செய்துகொண்டு இருந்துவிட்டு, திடீரென இந்தியா சென்று பிழைப்புக்கு ஏதும் தொழிலைப் புதிதாக ஆரம்பிக்கிறதென்பது சுலபமல்லதான். குழந்தை குட்டிகளுடன் அங்கு சென்று குடும்பத்தை எப்படி நடத்துவது என்ற கவலை பலக்கு இருக்கும் பணமுள்ளவர்களுக்கு எங்கிருந்தாலும் பிழைத்துக்கொள்ளலாம் அன்றுடம் உழைத்துப் பிழைக்க வேண்டிய ஏழைகளுக்கு இந்திய அரசாங்கம் கூடுமான உதவிகளை நாடு திரும்புபவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்றும் கூறினுர்.

இந்திய அரசாங்கம் இவ்விஷயமாக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுகள் நடத்திவருகிறதாம். திடீரெனத் திருப்பி அனுப்பாமல், போதிய அவகாசம் அளிப்பது மனிதாபிமானமாகும். இந்திய பாஸ்போட் எடுத்தும் இதுவரை பலர் இந்தியா செல்லவில்லையாம். ஏன் என்று கேட்டதற்கு பொலிஸ் தொல்லைக்குப் பயந்தே, தாங்கள் இந்தியா பாஸ்போட் எடுத்ததாகவும் இல்லாவிட்டால் 'கள்ளத்தோணி' என்று கூறி அன்றே நாடு கடத்தியிக்கலாமென்றும் தெரிவித்தனர்.

இந்தியா 'பாஸ்போட்' காரர்கள் 'விஸா' எடுப்பதாயின் இனி ஐநூறு ரூபாய் 'விஸா' வரிகட்டவேண்டும். சொற்ப வருமானமுள்ளவர்களுக்கு வரிகட்ட முடியாது. அதனுல் அவர்கள் தாய்நாடு திரும்பவேண்டிய கட்டாயம் ஏற்படும். ஒரு இந்திய வர்த்தகரைக்

இந்திய அன்பர்

இது மனிதர்களைப் பற்றிய விஷயமென்றும் மனிதாபிமானத்துடனேயே நடக்க வேண்டுமென்றும் காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா கூறுவார். அவரது துணைவியாரின் தலைமையில் நடைபெறும் இலங்கை அரசாங்கம் மனிதாபிமானத்துடனேயே காரியங்கள் செய்யுமென்று நம்பலாம். இந்திய அரசாங்கமும், தங்கள் பிரஜைகளின் நன்மையில் போதிய அக்கறை காட்டி உதவி செய்வது அதன் மேலான கடமையாகும்.

0 0 0

கொழும்பிலே ஒரு வேதாரண்ய குருக்களைக் கண்டேன், சுமார் 30 ஆண்டுகளுக்குமேல் அவர் இங்கு அந்தியேட்டி முதலியவற்றைச் செய்வதாகவும், சொற்ப வருமானமுள்ள அவர்கள் அதிகரித்துள்ள விஸாவரியைக் கூட்ட முடியாதென்றும் முக்கிய சமயப்பணி செய்யும் அவர்கள் விஷயத்தில் வரிவிதிக்கப்படாதென்றும் இந்து சமய ஆலோசனை சபை மூலம் அரசாங்கத்துக்கு மனுச்செய்துள்ளதாகத் தெரிகிறது.

வேதரண்யம் குருக்கள்மார்கள் வழிவழியாக இங்கு வந்து சமயப்பணி புரிகிறுர்கள். இவர்கள் விஷயத்தில் அரசாங்கம் சலுகைகாட்டுவது ஈழத்துச் சைவ சமூகத்தின் நன்றியையும் அபிமானத்தையும் பெறக்கூடியதாக இருக்கும்.

## இன்றைய பலன்

மேஷம்- அவசர முடிவினுல் அரிய சந்தர்ப்பத்தை இழக்கக்கூடும். பூமிப் பிணக்கை தவிர்க்கவும்.

ரிஷிபம்- திடீர் திருப்பம் வாழ்க்கையை வளம்படுத்தும். சிலர் வாழ்க்கை அதிர்ஷ்டகரமாக அமையும்.

மிதுனம்- ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்குவழிகளில் இறங்கவேண்டாம்.

கடகம்- ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும். வாகனத்தின் மூலம் அதிக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரும் நிகழ்ச்சிகளிலிருந்து பிரதமரும் நன்கு தெரிந்து கொண்டிருப்பது தான் சோஷலிஸத்துக்கு, "கடினஉழைப்பும் ஒழுங்கு, நாட்டில் ஒழுங்கும் கட்டுப்பாடும் நிலவவும் கடினமாக உழைக்கவும் வழிகாட்டவேண்டும். இதனால் அவர்களுக்கும் நாட்டுக்கும் நன்மை கிடைக்கும்.

## மாவீரர் டி கோல்

பிரான்ஸ் நாட்டின் முன்னுள் அதிபர் ஜெனரல் சார்ள்ஸ் டிகோல் திடீரென காலமான செய்தி அகில உலகத்தையும் ஒரு கணமாவது திகைக்க வைத்திருக்கும். ஜெனரல் டிகோலின் மறைவுடன் ஒரு சரித்திர சாகாப்தமே முடிவடைந்திருக்கிறது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது மார்ஸல் பெத்தான் பிரான்ஸை ஜெர்மனியிடம் சரணடையச் செய்த போது இளம் ஜெனரலாக விருந்த சார்ள்ஸ் டிகோல் இங்கிலாந்துக்குச் சென்று அங்குஇடைக்கால பிரஞ்சு அரசாங்கமொன்றையே அமைத்தார். யுத்தம் முடிந்ததும் ஜெனரல் டிகோல் அரசியலில் முக்கிய பங்கெடுத்தார். பிரான்சின் பிரதம மந்திரியாகவும் பின்னர் பிரஞ்சுக் குடியரசின் ஜனதிபதியாகவும் அவர் கடமையாற்றினுர். வாரத்துக்கொரு அரசாங்கமும் மாதத்துக் கொரு மந்திரி சபையாகவும் அரசியல் ஸ்திரமற்ற நிலையிலிருந்த பிரான்ஸ், அரசியலிலிருந்து ஒறிதுகாலம் ஒதுங்கியிருந்த ஜெனரல் டிகாலே மீண்டும் அரசியலுக்கிழுத்தது. அவரும் ஆட்சிப்பொறுப்பைஏற்று ஸ்திரமான அரசியலை நிலைநாட்டினுர். மேற்கத்திய வல்லரசுகளுடன் கூட்டுச் சேர்ந்திருந்தாலும் தமக்கெனத்தனிப் போக்கும் கொள்கையுமுடையவர் டிகோல். ஐரோப்பிய பொதுச் சந்தையில் பிரிட்டன் சேருவதை அவர் எதிர்த்தார்; கனடாவில் வாழும் பிரஞ்சு மொழிபேசும் மக்கள்வாழும் கூவபெக் சுதந்திர இயக்கத்தை அவர் ஆதரித்தார் அல்ஜீரிய மக்களுக்கு விடுதலையளித்த போது அதை எதிர்த்த வெள்ளையர்களை இருந்த இடம் தெரியாது மடக்கினுர்; சோவியத் யூனியனுடனும் சீனுவுடனும்நட்புறவுகொண்டார் மேற்காசிய விவகாரத்தில் தனது சொந்தஅபிப்பிராயத்தை வெளியிட்டு பலரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கினுர்.

ஐரோப்பாவுக்கு ஐரோப்பவே தலைமை தாங்கவேண்டும் வழிகாட்டு வேண்டும் என்ற அபிப்பிராயமுள்ள அதிபர் டிகோல் அஞ்சாநெஞ்சமும் தேசாபிமானமுமுள்ளவீரர் அவர்மறைவு பிரான்சின் தற்போதைய அதிபர் பொம்பிடோ குறிப்பிட்டிருப்பது போல பிரான்ஸை விதவையாக்கிவிட்டிருக்கிறது.

## மனேச்சர் மறையவில்லை

கோப்பாய் வாழ் மக்களால் 'மனேச்சர் மனேச்சர்' என அன்புடன் அழைக்கப்பட்டு மக்கள் மத்தியில் அழியா இடம்பெறச்செய்துவிட்டு மறைந்தசைவச் செம்மல் சுவாமிநாதன் மறைந்து ஒரு ஆண்டு இன்றுடன் பூர்த்தியாகிறது.

திரு. சுவாமிநாதனின் இலட்சியம், கொள்கை, முயற்சி ஆதியன இன்று ஆசிரியமணிகளாகவும் கல்வி நிறுவனங்களாகவும் பரிணமித்து நிற்பதைக் காணக் கூடியதாகவுள்ளது தன் வாழ்நாளில் சைவசமயம் தழைக்கவேண்டும், சைவ மக்கள் கல்விகற்று ஏழை மக்கள் முன்னேற்றமடைய வேண்டுமென்ற உன்னத நோக்கிற்கமைய கோப்பாயில் பாடசாலையொன்றைத் தாபித்தார். அத்துடன்சைவ ஆசிரியர்களை உருவாக்க ஆசிரிய கலாசாலை ஒன்றையும் கோப்பாயில் அமைத்தார்

பன்னைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்து பல கைத்தொழில் ஆசிரியைகளை இக்கிராமத்தில் உருவாக்கிய பெருமை திரு. சுவாமிநாதன் அவர்களையே சாரும்


சிதம்பரத்திலே யாழ்ப்பாணச் சைவர்களது பெயரிலே மடமொன்றைக் கட்டுவித்து அம்மடத்தில் அன்னதானம் முதலியன நடைபெறவும் வழி வகுத்தார். இவர் இவ்வுலகை விட்டு மறைந்தாலும் இவரது சேவைகள் எம்மனதைவிட்டு மறையவில்லை.

வாய்ந்த இந்த வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் பங்குபெற வந்துள்ளேன்" என்று ஆரம்பித்தார் விவியன். "சரி அதற்காக ஐந்து நிமிடங்கள் அதிகமாகத் தருகிறேன்" என்று தாராள மனது காட்டினுர் சபாநாயகர். ஆரம்பித்ததுதான், ஆரம்பித்தார், யாழ்தேவி, உத்தரதேவி எல்லாம் ஒதுங்கி இடம் கொடுக்கவேண்டிய வேகத்தில், ஐக்கிய

...டுக்கொண்டு இருந்த அமைச்சர் லெஸ்லி நடுவில் எழும்பிச் சென்றபோது "உமக்கு நேரம் ஆகிவிட்டது என்பதை உணர்ந்து தான் அமைச்சர் எழுந்து போகிறுர்" என்று சபாநாயகர் ஸ்டன்லி திலகரத்ன 'நைஸாக'ச் சொல்லிப் பார்த்தார். விவியனு விட்டுக்கொடுப்பார்?

'ஏகாதிபத்தியவாதிகளின் நண்பர் 'யங்கிடிக்' கம்யூனி

# ரமழான் குரலொலி



"அளவில் மோசடி செய்பவர்களுக்கு கேடு வைல் என்றநரகம்) உண்டு அவர்கள் மனிதர்களிடமிருந்து (தங்களுக்கு) அளந்து வாங்கும் பொழுது நிறைவாக வாங்கிக்கொள்கின்றனர் அவர்கள் பிறருக்கு அளந்து அல்லது நிறுத்துக் கொடுத்தால் பிறரை நஷ்டப்படுத்திவிடுகின்றனர். அவர்கள் ஒரு மகத்தான (மறுமை) நாளில் பூமியினுள்ளிருந்து) எழுப்பப்படுவார்கள் என்பதை எண்ணத்தில் கொள்ளவில்லையா?"

## (சதகல்லாஹுல் அழீம்)

(கலாமுல்லாஹ்: 83-ம்அத்தியாயம் 1-5ம்வசனம்

வாழ்க்கையை வளம் பெற நடாத்துதற்கு வாணிபமும் ஒரு சிறந்த தொழில் வார்த்தகம் செய்வோர் வஞ்சனை, சூது, வாது இவற்றை அகற்றி நேர்மை நியாயம். நெறி என்பவற்றைக் கடைப்பிடித்தல் வேண்டும்- என்ற திருகுர்ஆனின் மேலுள்ள போதனையை கடைப்பிடித் தொழுகிய முஸ்லிம்கள் உலகச்சந்தையிலே உயர்ந்து, நேர்மையுடை வாணிபர்களென்றும், கைதேர்ந்த வர்த்தகர்களென்றும் போற்றப்பட்டார்கள் என்பதை சரித்திரம் நன்கறிந்தோர் ஏற்பர்.

தற்பொழுது வியாபாரத்தில் மோசடி நிலவி வருவதை எங்கும் காண்கின்ருேம். இது மாற்றுனை ஏய்க்கும் இழிசெயல் என்பதை மோசடிசெய்வோர் மனதிற்கொள்ளட்டும். விற்பனைப் பொருட்களில் உள்ள குறைபாடுகளை கூருது மறைத்து விற்பது, நம்மை நம்பி வரும் வாடிக்கையாளனை வஞ்சித்தனுப்பும் செய்கையாகும். விற்பனைப்பொருட்களை அளவால் நிறையால் குறைத்து, சுரண்டிப்பிடுங்கிக் கொள்ளை லாபம் பெறுவோர் கூடிய விரைவில் தனமுடையோராய் மாறிவிடினும் தன்னுேடிணைந்திருந்த இரக்கசிந்தை, உண்மை, நன்மதிப்பு என்ற விலைமதிக்கமுடியா அரும்பெருங்குணங்களை இதயத்திலிருந்தகற்றப்பெற்ற ஈனர்களாய் ஆகிவிடுவர்.

மோசடி வியாபாரிகள் உலகில்தந்திரோபாயத்தாலும், திறமையாலும் தப்பிக்கொண்டார்களானுலும் மறுமையில் அல்லாவின் நீதியின்முன் என்ன கூறித்தான் தப்பப்போகின்றனரோ? சிந்திப்போம், செயல்புரிவோம்.

அஸ்ஸலாமு அலைக்கும்.

வழங்குபவர்: மௌலவி ஏ. எம், ஏ. ஹசன் [கபூரி]

**தொழுகை நேரங்கள் :-**

| சுபஹு | உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் |
|---|---|---|---|---|
| 4-39 | 5-59 | 12-20 | 3-19 | 5-50 |

| இஷா | சஹர்முடிவு |
|---|---|
| 7-10 | 4-24 |

டார்" என்று பொருமித்து தள்ளினுர் விவியன்.

## ராஜன் செல்வநாயகம்

இன்று முதன் முறையாக சபையில் பேசிய 'புதுமுக' ராஜன் செல்வநாயகம், "எங்களுடைய மக்கள் அரசாங்கம், எங்களுடைய மக்கள் அரசாங்கம்" என்று அடிக்கொருதரம் சொல்லி தமிழரசுக் கட்சியின் 'சுதந்திரன்' ஏட்டையும் கையில் வைத்துக்கொண்டு "தமிழரசுக்கட்சியினர் பசுத்தோல் போர்த்திய புலிகள், அவர்களை நம்பாதீர்கள் தமிழரசுக்கட்சியினர் ஆட்சி மன்றத்திலே அமைச்சர்களைப் புகழ்ந்து பேசிக் காரியம் சாதித்துவிட்டு, தொகுதிகளிலே போய் அவர்களைத் தாக்கிப் பேசுவார்கள்" என்று எச்சரித்தார்.

திரு ராஜன் செல்வநாயகத்தின்பேச்சை காதுகுளிரக் கவனமாகக் கேட்டிக்கொண்டிருந்தவர் அரசாங்கதரப்பு எம். பி கள் தனக்குப்பேச அனுமதித்த சபாநாயகருக்குத் தட்டுத்தடுமாறி சிங்களத்தில் நன்றி தெரிவித்த ராஜன் செல்வநாயகத்திற்கு நேற்று பேசிய உடுப்பிட்டி எம். பி திரு. ஜெயக்கொடி கூறிய தகவல்கள்தான் பிடிக்கவில்லை 'வடக்கு, மாகாணத்திற்கு வருகின்ற அமைச்சர்களும், உதவி அமைச்சர்களும். அவர்களின் நடவடிக்கையால் அங்கே பிளவுகளைவளர்த்து பிரிவினைகளை உண்டாக்குகிருர்கள்" என்றுகூறி தபால் தந்தி அமைச்சர் திரு. குமாரசூரியரைக் குறிப்பிட்டுக் காட்டிப் பேசியிருந்தார் திரு ஜெயக்கொடி.

"இது முற்றிலும் பொய்யானது" என்று மறுத்த ராஜன் செல்வநாயகம் மட்டக்களப்புக்கு வந்த அமைச்சர்களும் உதவி அமைச்சர்களும், தமிழ் சிங்கள, முஸ்லிம் மக்களுடன் சகோதரர்களைப்போல பழகினுர்கள்" என்று நற்சான்றிதழ்வழங்கினுர்.

"தமிழ்-சிங்கள ஒற்றுமையைப் பிளவுபடுத்தியவர்கள் தமிழரசுக்கட்சியினரே தமிழ்- சிங்கள வேறுபாட்டை உருவாக்கி.எங்களைப் புறக்கணிக்கவைத்து, தமிழ்ச் சமுதாயம் முன்னேறவிடாமல் தடைசெய்தவர்கள் தமிழரசுக்கட்சியினர்தான்" என்று தாக்கினுர்.

தமிழரசுக்கட்சியினர் ஆட்சிமன்றத்தின் உள்ளேயும், அமைச்சர்களின் முன்னிலையிலும், அவர்களைப் பாராட்டிப் புகழ்ந்துபேசி காரியம் சாதித்துவிட்டு, வேறு இடங்களில் அவர்களைத் தாக்கிப் பேசக்கூடிய தான முறையில் பேசித் தான் உரிமைகளைப் பெற முடியும், கட்சி அடிப்படையில் அமைச்சர்களுக்கு கறுத்தக்கொடி காட்டி தடை செய்து கொண்டிருந்த வேளையில் தான் ஆட்சிமன்றத்திற்கு வந்ததையும் அதே வேளையில் மக்கள் அரசாங்கம் அமைக்கப் பட்டதையும் இணைத்துப் பார்த்துப் பெருமைப்பட்டுக் கொண்டார்.

## லெஸ்லியும் சுபசிங்காவும்

இன்றைய விவாதத்தில் இரண்டு அமைச்சர்கள் போக்குவரத்து அமைச்சர் திரு, லெஸ்லி குணவர்தனவும், கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்காவும் கலந்து கொண்டனர்

கைத்தொழில் அமைச்சர் திரு. ரி. பி சுபசிங்கா அவரது உதவி அமைச்சர் திரு. சூரியஆராய்ச்சி நேற்று விட்ட இடத்திலிருந்து இன்று தொடங்கி தனியார் துறையினர் நாட்டின் உண்மையான பொருளாதார முன்னேற்றத்திற்காக உழைக்கவில்லை. லாபம் பெறுவதைதான் அவர்கள் முழு முதல் நோக்கமாகக் கொண்டிருந்தனர் என்று காட்ட முற்பட்டார்,

'இந்த நாட்டில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களைக் கொண்டியங்க கூடிய கைத்தொழில்களுக்குத்தான் அரசாங்கம் முதலிடம் கொடுக்குமே தவிர, வெளிநாடுகளிலிருந்து, லேபல், போத்தல் பவுடர் மெஷின் எல்லாவற்றையுமே இறக்குமதி செய்து இங்கே சும்மா டப்பாக்களிலும் போத்தல்களிலும் அடைக்கும் தொழிற்சாலைகளுக்கு இனி இடம் கிடையாது' என்று திட்டவட்டமாக அறிவித்தார்அமைச்சர்.

நமதுநாட்டின் பொருளாதாரப்பிரச்னைகளையெல்லாம் முதலாளித்துவ முறையின் கீழ் தீர்க்க முடியாது: தீர்க்கமுடியுமாஞல் கடந்த 21வருடங்களில் நமதுபிரச்னைகள்தீர்க்கப்படவேண்டும் என்று சொன்ன அமைச்சர் 'சோஷலிஸப் பாதையில் சென்ருல்தான்நமது பொருளாதாரப் பிரச்னைகளுக்கு முடிவு ஏற்படும் என்று நம்பிக்கை தெரிவித்து. புதியதோர்உலகம் செய்ய சோஷலிஸப்பாதையில்முன்னேறிச் செல்லபழையகாலங்கடந்த கொள்கைகளை உதறித் தள்ளிவிட்டு எங்களுடன் ஒன்று சேருங்கள்'என எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

'அரசாங்கம் போகின்ற வேகம் போதாது என்று குறை கூறுபவர்களுக்கு அமைச்சர் சுபசிங்கா கூறிய அறிவுரை இதுதான்.

சொற்ப வருமானமுள்ளவர்களுக்கு வரிகட்ட முடியாது அதனல் அவர்கள் தாய்நாடு திரும்பவேண்டிய கட்டாயம் ஏற்படும். ஒரு இந்திய வர்த்தகரைக் கேட்டேன். இந்தியா, முன்னிருந்த இந்தியா அல்ல வென்றும், இலங்கையை விடவும் வியாபாரச்செழிப்பு இருப்பதாயும் தெரிவித்தார் எதற்கும் விசாரப்பட வேண்டியதில்லை. நடப்பதெல்லாம் நன்மைக்கே. கடவுளை நம்பினேர் கைவிடப்படார்.

0 0 0

தமிழகத்திலே இப்போது நெல்விலை குறைந்திருப்பதாகத் தெரிகிறது. அரிசி மலிந்தால் ஐந்தும் மலியுமென்பார்கள். ராமநாதபுரம் மாவட்டத்தில் நல்ல மழை பெய்தால் அங்கு தானியங்கள் விளைந்து, மக்கள் பிழைப்புக்காக இலங்கை போன்ற வெளிநாடுகளுக்கு வரத் தேவையிராதென்றும், மழை இல்லாவிட்டால் தான் இங்கு வருவதாகவும் தெரிகிறது. இம்முறை அங்கு நல்லமழை பெய்து விளைச்சலும் நன்ருக இருப்பதால், கள்ளக் குடியேற்றங்கள் பெரிதும் குறைந்து விட்டதாம்.

இங்கிருந்து திரும்பிவரும் இந்தியருக்கு, தமிழக அரசு வேண்டிய உதவிகள் செய்வதுடன், அவர்கள் சேமித்து வைத்துள்ள பணத்தைத் தங்களுடன் கொண்டு செல்ல இலங்கை அரசு அனுமதித்தால் தாங்கள் கவலையில்லாமல் அங்கு புதிய வாழ்க்கையைத் தொடங்கலாமென்றும், அப்படி அனுமதிப்பார்களா என்றும் கேட்கிருர் ஓர்

'சோஷலிஸப் பாதையில் நாம் முன்னேறிச் செல்வதைத் தடைசெய்ய ஒவ்வொரு மூலையிலும் ஏகாதிபத்தியவாதிகளும், அவர்களது ஏஜண்டுகளும் காத்துக் கொண்டிருக்கின்றன. ஜனநாயகத்தைப் பற்றிப் பெரிதாகப் பேசுபவர்கள், ஆனல் தக்க சந்தர்ப்பத்தில் ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைத்துவிட்டு பாசிஸ ஆட்சியை நிலைநாட்ட அவர்கள் தயங்கமாட்டார்கள், இத்தாலி, ஜெர்மனி,இந்தோனேஷியா போன்ற நாடுகளின் வரலாறுகள் இந்தப் பாடத்தைத்தான் போதிக்கின்றன. எனவே தான் நாம் சோஷலிஸ சமுதாயம் அமைக்க எடுக்கும் ஒவ்வொரு முயற்சியையும் தீர்க்க ஆலோசித்து எடுக்கவேண்டியிருக்கிறது, ஏகாதிபத்தியவாதிகளின் பிடிக்குள் விழாமலிருக்க நாம் கவனமாக இருக்கவேண்டும்'

...ளால் அவப்பெயருக்கு இடமுண்டு. குறுக்குவழிகளில் இறங்கவேண்டாம்.

கடகம்- ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும், வாகனத்தின் மூலம் அதிக பொருள்வரவுக்கு இடமுண்டு

சிம்மம்- நீண்டநாட்களின் பின்பு இன்று நினைவுதினம். எதிர்பார்த்த பொருள் கைவந்து சேரும்.

கன்னி- குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் தென்படும். உங்களைப் பற்றி புனைந்துரைகளைப் பரப்புவதற்கு சிலர் முற்படுவார்கள்.

துலாம்- சந்திப்பின்மூல பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளுவீர்கள் மகிழ்ச்சியான தினம்.

விருட்சிகம்- வழக்குவிவகாரங்களில் மாட்டிக் கொள்ளவேண்டாம். முன் யோசனையுடன் செயலாற்றுக.

தனுசு- உள்ளப்படுதாவில் உவகை கூத்தாடும். உறவினர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள் இன்று பொன்னனதினம்,

மகரம்- எதிலும் முன்னணியில் நிற்பீர்கள். பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும். நிம்மதியான தினம்.

கும்பம்- நீண்ட நாள் கொடுக்கல் வாங்கல் இன்று நிவர்த்தியாகும். பெரிய மனிதரின் ஆதரவு பெறுகும்.

மீனம்- கடன் தொல்லைகள் கவலையைத் தரும். உறவினருடன் பிணக்குகள் தோன்றும் உஷாராக இருக்கவும்.

சோதிடக்கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

## அரியாலையூர் ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சொந்த நிலமும் நிரந்தரக் கட்டிடமும் இல்லாத ஸ்ரீகலைமகள் சனசமூகநிலையத்திற்கு இவர் நிலம் வாங்கும் முயற்சியில் இரவு பகலாக ஒய்வின்றி உழைத்தார்.

அன்னரின் பெருமுயற்சியாலும் அங்கத்தவர்களின் ஒத்துழைப்பாலும் வாங்கிய நிலத்தில் நிலையத்திற்கென அமைந்த நிரந்தரக் கட்டிடத்தின் வேலைகள் பூரணமானதும் 1969ம் வருடம் ஐப்பசி மாதம் 22ம் நாள் தமது 75வது வயதில் திடீரென எம்மையெல்லாம் தவிக்கவிட்டு இறைவனடி சேர்ந்தார் திரு. கதிர்காமு. அவர் மறைந்துவிட்டபோதிலும் அவரின் போதனையும், சாதனையும், மேசனர் என்ற நாமமும் நீடு நிலை பெற்று வாழும்.

—சி. வைகுந்தசாமி

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org